
ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்



மே — 1981

வைகாசி

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

தற்கால மக்களின் ஆன்மிக மறுமலர்ச்சிக்கு ஏற்ற வகையில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர் காட்டிய வழியில் மத உண்மைகளை இந்த மாதப் பத்திரிகை வெளியிட்டு வருகிறது.

சந்தா விவரம்

வருட சந்தா	ரூ. 12
ஆயுள் சந்தா	ரூ. 150
தனிப் பிரதி	ரூ. 1-20

ஆயுள் சந்தாவை மொத்தமாகவோ, பகுதி பகுதியாகவோ, மாதம் ரூ. 15 ஆகவோ ஒரு வருடத்திற்குள் செலுத்தலாம்.

வருட சந்தாதாரர்களை ஆயுள் சந்தாதாரர்களாகப் பதிவு செய்து கொள்வதன் மூலம் பத்திரிகையின் வளர்ச்சிக்கு உதவி புரியக் கோருகிறோம். ஆயுள் சந்தா என்பது 35 ஆண்டுகளுக்குப் பத்திரிகை அனுப்பப்படும் என்பதை குறிக்கிறது.

வேண்டுகோள்

1. மக்களுக்கு உணவு உடை வழங்கி உடல் சம்பந்தமான தேவைகளைப் பூர்த்தி செய்வது மிகவும் நல்ல உதவி ஆகிறது. கல்வி, தொழில் முதலியவற்றைக் கற்பித்து ஜீவனோபாயத்திற்கு வழிவகுத்துத் தருவது அதனினும் மேலான சேவை ஆகிறது. ஆன்மிக சம்பந்தமான நூல்களைப் படித்தும் கேட்டும் ஆத்மசாதனங்களில் ஈடுபடச் செய்வது தலையாய கைங்கரியமாகிறது. தானங்களிலேயே மிகச் சிறந்த தானம் ஞானதானம் என்பது ஆன்றோர் கண்ட உண்மை.

வாசக அன்பர்கள் தங்களின் சந்தாவைச் செலுத்துவதுடன், மேலும் தமது நண்பர்கள் சிலரையும் சந்தாதாரர்களாகச் சேர்த்துத் தருவது ஒரு நல்ல தொண்டாகும். இந்தப் புனித மதத் தொண்டில் சிரத்தையுடன் ஈடுபடுவது நமக்கும் மற்றவர்களுக்கும் பெருநலன் தரும்.

2. அன்பர்கள் தங்களின் தெய்விகக் கைங்கரியமாக கல்வி ஸ்தாபனங்கள், சத்சங்கங்கள் முதலியவைகளுக்குப் பத்திரிகை போய்க்கொண்டிருக்கும்படி செய்யலாம். இது ஒவ்வொரு மாதமும் தாங்கள் அளிக்கும் மேலான நன்கொடையாகவும், தங்களை ஞாபகப்படுத்தும் சிறந்த வெகுமதியாகவும் அமையும்.

3. அன்பர்கள் தங்களால் இயன்ற ஒரு சிறிதளவிற்காகிலும் புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துத் தரும் விஷயத்தில் முயற்சி செய்வார்கள் என்று நம்புகிறோம். குறைந்தது மூன்று சந்தாதாரர்களையாவது சேர்த்துத் தருவது மிகப் பெரிய உபகாரமாக இருக்கும். இதன் மூலம் இன்றைய சமுதாயத்தின் சூழ்நிலையில் நல்ல கருத்துகள் வளர அரும்பெரும் தொண்டு செய்தவர்களாகிறீர்கள்.

4. புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பி வைக்கும்போது புதிய சந்தா என்று குறிப்பிட்டு எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பழைய சந்தாதாரர்கள் தமது கடிதப் போக்குவரத்துகள் எல்லாவற்றிலும் சந்தா எண்ணையும் முழு விலாசத்தையும் அவசியம் குறிப்பிட்டு எழுத வேண்டுகிறோம்.

தொலைபேசி :
7 1 2 3 1

விவரங்களுக்கு:

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர் : சென்னை-600 004

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

தொகுதி 61 | மே — 1981 | இதழ் 5

பொருளடக்கம்

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் ஊஞ்சல் சேவை

ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் எல்லாக் குணங்களையும் அவஸ்தைகளையும் கடந்து விளங்குகிறார். அவர் அவற்றால் பாதிக்கப்படவில்லை; அவைகள் அவரைப் பாதிக்கவும் முடியாது. ஆனால், பக்தர்கள் அந்த ஒப்பற்ற பரம்பொருளைத் தங்கள் உள்ளத்திலேயே உணர்ந்து அனுபவிக்கிறார்கள். ஆகையால் பக்தர்கள், ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் எப்போதும் உற்சாகமாகவும் சந்தோஷமாகவும் கவலையற்றும் இருந்து, தங்களுக்கு எல்லா விதமான சௌகரியங்களையும் சௌபாக்கியங்களையும் க்ஷேமங்களையும் கொடுத்துக்கொண்டிருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

இதுதான் திருமலையில் கண்ணாடி ஹால் எனப்படும் அயன மஹாலில் நாள்தோறும் நடத்தப்படும் ஊஞ்சல் சேவையின் தாத்பரியமாகும். இந்தச் சேவை ஒவ்வொரு நாளும் மாலையில் ஆறு மணிக்குப் பிறகு நடந்து வருகிறது. உற்சவமூர்த்தி அழகாக அலங்கரிக்கப்பெற்ற ஊஞ்சலில் தம் தேவிமார்களுடன் எழுந்தருளுகிறார். கந்தம், சாமர உபசாரங்கள், வேத பாராயணம், பஜனை ஆகியவற்றுடன் ஸ்வாமி லேசாக ஊஞ்சல் ஆடுகிறார்.

மேற்கண்ட ஊஞ்சல் சேவை உற்சவத்தில் பங்குகொள்ள விரும்பும் கிருகஸ்தர்கள் ரூ. 1000 செலுத்தித் தங்கள் குடும்பத்தில் ஆறு பேர்களுடன் இந்த உற்சவத்தில் கலந்துகொள்ளலாம். அவ்விதம் உற்சவத்தில் பங்குகொள்ளும் கிருகஸ்தருக்கு ரூ. 250 பெறுமானமுள்ள தங்க டாலரும் வஸ்திர வெகுமதியும் அளிக்கப்படும்.

எக்ஸிக்யுட்டிவ் ஆபீசர்,

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன் இல்லை

—திருமூலர்

தொகுதி 61	துர்மதி ஞு வைகாசி	இதழ் 5

பிரார்த்தனை

नमोऽकिञ्चन-वित्ताय निवृत्त-गुण-वृत्तये ।
आत्मारामाय शान्ताय कैवल्यपतये नमः ॥

நமோऽகிஞ்சன் – வித்தாய நிவ்ருத்த – குண – வ்ருத்தயே |
ஆத்மாராமாய சாந்தாய கைவல்யபதயே நம: ||

எவ்வகைப் பொருளும் இல்லாமையைச் செல்வமாகக் கொண்டவரும், முக்குணங்களின் செயல்களிலிருந்து விடுபட்டவரும், ஆன்மாவில் நிலைத்தவரும், அமைதியில் ஆழ்ந்தவரும், கைவல்யம் என்ற முக்திக்குத் தலைவருமான இறைவருக்கு வணக்கம்.

அனாதிபவ வாரிதியி லழிந்த என்னை
அகண்டபர ஞானமெனும் நாவாய்க் கொண்டு
சனாதனமாம் பரப்பிரம்ம தீரத்தின்கண்
சகஜமதா யேற்றியசற் குருவே போற்றி
விநாசமுறும் தேகாதி நானென் றெண்ணி
விதம் விதமாய்த் துன்பமிகுந் திருந்த என்னை
அநாமயமாம் பரப்பிரம்மம் நீயென் றோதி
அகண்டசுகம் நல்கியசற் குருவே போற்றி.

— ஒரு துறவி



ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருள் வாக்கு

சனிக்கிழமை, ஏப்ரல் 5, 1884

பிராணகிருஷ்ணர் : சுவாமி! மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்க்கையின் தன்மை எத்தகையது?

ஸ்ரீராமகிருஷ்ணர் : கேசவசேனரும் இதே விஷயத்தைப் பற்றிக் கேட்டார். ஒரு மனிதனிடம் அஞ்ஞானம் இருக்கும் வரை, அவன் ஞானம் அடையும் வரை அதாவது அவன் ஈசனது தரிசனம் பெறும்வரை, பிறவி அவனுக்கு உண்டு. அது வரையில் அவன் பிறவி எடுத்துத்தான் ஆக வேண்டும். ஆனால் ஞானம் பெற்ற பின் அவனுக்கு இந்த உலகத்திற்குத் திரும்பி வரும் அவசியமோ, வேறு உலகத்திற்குச் செல்லும் அவசியமோ ஏற்படாது.

குயவன் தன் பானைகளை உலர்வதற்காக வெயிலில் வைக்கிறான். அவற்றுக்குள்ளே சுட்ட பானைகள், சுடாத பச்சைப் பானைகள் என்று இரண்டும் இருப்பதை நீங்கள் கவனித்திருக்கிறீர்கள் அல்லவா? ஆடு மாடுகள் அவற்றின் மீது நடக்கும்படி நேருமானால் பானைகளில் சில நொறுங்கிப் போகின்றன. முன்னரே சுடப்பட்டுள்ள உடைந்த பானைகளைக் குயவன் தூர எறிந்துவிடுகிறான், ஏனென்றால் அவற்றால் இனி அவனுக்கு எந்தப் பயனும் இல்லை. ஆனால் பச்சைப் பானைகள் உடைந்திருந்தபோதிலும் அவற்றை அவன் சேகரிக்கிறான். அவற்றை ஒன்றாகத் திரட்டிப் பிசைந்து தன் சக்கரத்தில் வைத்துச் சுற்றுகிறான். அவ்விதம் அவன் உடைந்துபோன பச்சைப்பானைகளின் மண்ணைக் கொண்டே புதிய பானைகளை உண்டாக்குகிறான். அது போலத்தான் ஒரு மனிதன் ஈசனது தரிசனத்தைப் பெறும்வரைக்கும் அவன் குயவனாகிய ஈசனது கைக்குத் திரும்பவும் வர வேண்டியவனேயாவான், அதாவது மறுபடியும் அவன் பிறக்க வேண்டியவனே ஆவான்.

வேகவைத்த நெல்லை விதைப்பதனால் என்ன பயன் ஏற்படும்? அது ஒருகாலும் முளைக்காது. அதுபோல் ஒரு மனிதன் ஞானம் என்ற தீயால் வறுக்கப்பட்டுச் சித்தபுருஷனாக ஆகிவிடுவானாயின், அவன் புதிய சிருஷ்டிக்கு (படைப்புக்கு) ஆளாகமாட்டான். அவன் விடுபட்டு முக்தி அடைந்தவனாக ஆகிவிடுகிறான். புராணங்களின் கருத்துப்படி, பக்தனும் பகவானும் வெவ்வேறான இரண்டு விதத் தத்துவங்கள்(உண்மைப் பொருள்கள்). 'நான்' என்பது ஒரு தத்துவம், 'நீ' என்பது மற்றொரு தத்துவம். உடல் மண் பாண்டம் போன்றது; அதில் மனம், புத்தி, அகங்காரம் என்னும் தண்ணீர் இருக்கிறது. பிரம்மம் சூரியனைப் போன்றது. இந்தச் சூரியன் அந்த மண்பாண்டத்திலுள்ள தண்ணீரில் பிரதிபலிக்கிறது. அது காரணமாகப் பக்தன் பகவானின் தெய்விக வடிவத்தைக் காண்கிறான்.

வேதாந்தத்தின்படி பிரம்மமே சத்தியம் (வஸ்து), மற்றவை யாவும் மாயை (மித்யை) ஆகும். அவை அனைத்தும் கனவு போன்றன, உண்மைப் பொருள்கள் அல்ல (அவஸ்து). அகங்காரம் ஒரு மரக்குச்சியைப்போல் சச்சிதானந்தக் கடலில் குறுக்கே விழுந்து கிடக்கிறது. [ம - வை நோக்கி] நான் சொல்வதைக் கவனி. இந்த அகங்காரம் என்ற கழியை நீக்கிவிடும்போது, ஏகமாய் அகண்டமாயுள்ள சச்சிதானந்தக் கடல் மட்டுமே உள்ளது. ஆனால் அகங்காரம் என்னும் மரக்குச்சி இருக்கும் வரையில் இரண்டும் இருப்பதான தோற்றம் உண்டு. இந்தப் பக்கம் தண்ணீ

ரின் ஒரு பாகமும் அந்தப் பக்கம் தண்ணீரின் இன்னொரு பாகமும் இருக்கின்றன. பிரம்ம ஞானம் பெற்றதும், ஒருவன் சமாதியில் நிலைக்கிறான். அப்போது இந்த அகங்காரம் அழிக்கப்படுகிறது.

ஆனால் சங்கராசாரியார் மக்களுக்குப்போதிக்கும்பொருட்டு உலகநன்மைக்காக ஞானியின் அகங்காரத்தை* வைத்திருந்தார். [பிராண கிருஷ்ணரை நோக்கி] ஞானியை இன்னான் என்று குறித்துக் காட்டும் சில அடையாளங்கள் உள்ளன. தமக்கு ஞானம் இருப்பதாகச் சிலர் நினைக்கின்றனர். ஞானம் பெற்றிருப்பதற்கு அறிகுறிகள் எவை? ஒரு ஞானி, எவனுக்கும் தீங்கு (இம்சை) செய்ய முடியாதவனாவான். அவன் குழந்தைபோல் இருப்பான். இரும்பினால் செய்யப்பட்ட வாள் ஸ்பரிசவேதியைத் தீண்டிவிட்டால், அந்த வாள் தங்க வாளாக மாறிவிடுகிறது. அந்தத் தங்க வாள் வெட்டுவதற்கு ஒருபோதும் பயன்படாது. வெளியே பார்ப்பதற்கு ஒரு ஞானியிடம் கோபம் இருப்பது போலவும் அகங்காரம் இருப்பது போலவும் மற்றவர்களுக்கு வேண்டுமானால் தோன்றலாம். ஆனால் உண்மையில் அந்த ஞானியிடம் அதெல்லாம் ஒன்றுமே தங்கியிருக்காது.

தூரத்திலிருந்து பார்க்கும்போது, தரைமீது கிடக்கும் ஓர் எரிந்த கயிறு உண்மையான கயிற்றைப் போல் தோன்றலாம்; ஆனால் நீ அருகே வந்து அதன்மீது ஊதினால் அது முற்றிலும் மறைந்துவிடுகிறது. ஞானியின் கோபமும் அகங்காரமும் வெறும் தோற்றங்களே; அவை உண்மையல்ல. உண்மையில் அவை குரோதமும் அல்ல, அகங்காரமும் அல்ல.

ஒரு குழந்தையிடம் பற்று இல்லை. அவன் விளையாட்டுக்காக ஒரு வீடு கட்டுகிறான்; எவனாவது அந்த வீட்டைத் தொடுவானாயின் அவன் குதிப்பான், கத்துவான். ஆனால் மறுகணம் அவனே அந்த வீட்டை அழிக்கிறான். இந்தக் கணத்தில் அவன் தனது துணியின்மீது மிக்க பற்று வைத்திருப்பான். அவன், 'என் அப்பா எனக்கு இதைத் தந்துள்ளார். நான் இதை யாருக்கும் தரமாட்டேன்' என்று சொல்லுகிறான். மறுகணம் நீ ஒரு பொம்மையைக் கொடுத்து அவனிடமிருந்து அதை வாங்கிக் கொள்ள முடியும். துணியை எறிந்துவிட்டு அவன் போய்விடுவான்.

இவையெல்லாம் ஞானியின் அறிகுறிகள். அவனுடைய வீட்டில் மிகுந்த செல்வம் இருக்கலாம். ஒருவேளை அவனுடைய வீட்டில் கட்டில், நாற்காலிகள், சித்திரங்கள், வண்டி, குதிரை வாகனங்கள் போன்ற போகத்திற்கு உரிய பல பொருள்கள் இருக்கலாம். ஆனால் எந்த நாளும் அவன் இவை அனைத்தையும் விட்டுக் காசிக்குப் போய்விடுவான்.

வேதாந்தக் கொள்கையின்படி விழிப்பு நிலை என்று சொல்லப்படுவதில்கூட உண்மை கிடையாது (மித்யை). ஒரு சமயம் விறகுவெட்டி ஒருவன் தூக்கத்தில் கனவு கண்டுகொண்டிருந்தான். அப்போது யாரோ ஒருவன் விறகு வெட்டியைத் தூக்கத்திலிருந்து தட்டி எழுப்பினான். கனவு கலைந்துபோனதனால் விறகுவெட்டி கோபத்துடன், "நீ ஏன் என் தூக்கத்தைக் கலைத்தாய்? நான் கனவில் ஓர் அரசனாக இருந்தேன். எனக்கு ஏழு புதல்வர்கள் இருந்தார்கள். அந்த அரசகுமாரர்கள் அனைவருமே கல்வி வில்வித்தை ஆகிய எல்லாவற்றிலும் சிறந்து விளங்கினர். நான் சிம்மாசனத்தில் அமர்ந்து ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தேன். நீ ஏன் அத்தகைய என் மகிழ்ச்சியான வாழ்க்கையைக் குலைத்துவிட்டாய்?" என்று வினவினான். அதற்கு விறகு வெட்டியைத் தட்டி எழுப்பியவன், "அதெல்லாம் வெறும் கனவுதானே! கனவு கலைந்து

---

* 'ஞானி அகங்காரம்' என்பது பிரம்மஞானம் பெற்றதனால் தூய்மையாக்கப்பட்டதும் விளக்கம் பெற்றதுமான 'நான்' என்ற உணர்ச்சி ஆகும். நித்திய அநித்திய வஸ்து விவேக முறையைப் பின்பற்றிவரும் ஞானி சமாதி அடையும்போது, அகங்காரத்தைப் பிரம்மத்தில் லயமடையச் செய்கிறான். அதன்பின் அவன் விவகார நிலைக்கு இறங்கும்போது அகங்காரத்தின் தோற்றம் ஒன்று அவனிடம் உள்ளது; ஆனால் அந்த நிலையிலும் அவன் எப்போதும் பிரம்மத்தோடு தான் ஐக்கியமாயுள்ள உணர்ச்சியை இழக்காமல் இருப்பான். இந்தப் போலி 'ஞானி அகங்காரம்' எனப்படும். பக்திநெறியைப் பின்பற்றும் பக்தனோ பகவானுக்கும் தனக்கும் உள்ள நித்திய சம்பந்தத்தை உணர்கிறான். அவனும் விவகாரநிலையில் ஒரு போலி அகங்காரத்தை வைத்துக்கொள்கிறான். இந்த அகங்காரத்தில் அஞ்ஞானத்திற்கு உரிய தன்மைகள் ஒன்றேனும் இரா; இது 'பக்த அகங்காரம்' எனப்படும். இங்கே கூறப்பட்டுள்ள இரண்டு வித அகங்காரங்களும் ஒரே அனுபூதி நிலையைக் குறிப்பனவாகும்.

போனதனால் இப்போது என்ன நஷ்டம் வந்து விட்டது?'' என்று கேட்டான். விறகுவெட்டி அவனிடம், ''சரிதான் போடா! விஷயம் தெரியாமல் நீ பேசுகிறாய். நான் இப்போது விறகு வெட்டியாக இருப்பது எந்த அளவுக்கு உண்மையோ அந்த அளவுக்குக் கனவில் நான் ராஜாவாக இருந்தேன் என்பதும் உண்மைதான். விறகுவெட்டியாக இருப்பது உண்மையாகுமானால், கனவில் ராஜாவாக இருந்தேன் என்பதும் உண்மைதான்'' என்று பதில் கூறினான்.

ஸ்ரீராமகிருஷ்ணர் எப்போதும் ஞானத்தைப் பற்றித்தான் பேசுவது வழக்கம். அதனால்தான் குருதேவர் ஞானியின் நிலையைப்பற்றிக் கூறினார் போலும். அடுத்து அவர் விஞ்ஞானியின் நிலையைப்பற்றிச் சொல்ல ஆரம்பித்தார். அவ்விதம் சொல்லும்போது அவர் தமது சொந்த நிலையையே குறிப்பிட்டாரோ!

ஸ்ரீராமகிருஷ்ணர்: நேதி, நேதி (இது அல்ல, இது அல்ல) என்ற ஆராய்ச்சியின் மூலம் ஆத்மாவைச் சாட்சாத்கரிப்பதுதான் ஞானம் எனப்படும். நேதி, நேதி என்ற விசாரம் செய்து சமாதியில் நிலைப்பதன் மூலம் ஒருவன் ஆத்ம சாட்சாத்காரம் எய்துகிறான்.

விஞ்ஞானம் என்பது என்னவென்றால் விசேஷமான அளவில் ஞானமடைதல் ஆகும். சிலர் பாலைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறார்கள். சிலர் பாலைப் பார்த்திருக்கிறார்கள். சிலரோ பாலைப் பருகியுள்ளார்கள். யாரெல்லாம் பால் என்று வெறும் பெயரை மட்டும் கேள்விப்பட்டிருக்கிறார்களோ அவர்கள் அஞ்ஞானிகள் ஆவர். பாலைப் பார்த்திருப்பவர்கள் ஞானிகள் ஆவர். பாலைப் பருகியிருப்பவர்களே விஞ்ஞானியர் ஆவர். அதாவது விசேஷமான முறையில் பாலைப் பற்றி அவர்கள் அறிந்திருக்கிறார்கள். ஈசுவர தரிசனத்தைப் பெற்று அவருடன் மிகவும் நெருங்கிய உறவினர் போன்று பேசக்கூடியவர்களே விஞ்ஞானிகள் என்று சொல்லப்பெறுகின்றனர். ☆

வாசகர்களுக்கு முக்கிய அறிவிப்பு

சமீப காலமாக இந்துக்களைத் தங்கள் மதத்திற்கு மாற்றும் முயற்சியில் இஸ்லாமியர்களும் கிறிஸ்தவர்களும் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

தென்காசி அருகில் மீனாட்சிபுரம் என்ற கிராமம் முழுவதும் முஸ்லீம்களாக மதம் மாற்றம் செய்யப்பட்ட செய்தி 12-4-81 இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் வெளியாகியுள்ளது. இந்தச் செய்தி இந்துக்களிடையே என்றுமில்லாத அளவில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

''அராபியா நாட்டுப் பணம் நாடு தழுவிய முறையில் ஹரிசன இந்துமக்களை மதம் மாற்றிவிட வேண்டும் என்பதற்காகச் செலவிடப்படுகிறது'' என்று ஹிந்து மறுமலர்ச்சி 15-4-81 இதழில் வெளிவந்துள்ள செய்தி தெரிவிக்கிறது.

விஜய பாரதம், ஹிந்து மறுமலர்ச்சி ஆகிய பத்திரிகைகள் ஹிந்துக்களுக்குப் பிற மதத்தவர்களால் நேர்ந்து வரும் இன்னல்களைத் தெளிவாக வாரந்தோறும் எடுத்து விளக்கி



வருகின்றன. அவற்றை எல்லாம் படிக்கும் போது இந்துக்கள் தங்கள் மதத்தைப் பாதுகாப்பதில் முனைந்து நிற்க வேண்டும் என்ற எண்ணமே தோன்றுகிறது.

ஹிந்துமதத்தைச் சேர்ந்த ஒவ்வோர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இந்துமதத்தையும் இந்தியப் பண்பாட்டையும் காக்கும் தலையாய கடமை இருக்கிறது.

ஹிந்து மதத்தவர்களுக்கு நிறைந்த அளவில் இப்போது விழிப்புணர்ச்சி தேவைப்படுகிறது. அதை விளக்கும் கட்டுரை அடுத்த இதழில் பிரசுரமாகும்.

— ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

விஜயதீபம்

அனுமன் ஸ்ரீராமபிரானைச் சந்தித்தல்

துளசி ராமாயணத்தின் அடிப்படையில் அனுமனைக் குறித்த சில விவரங்களை இந்த இதழில் நாம் பார்க்கப் போகிறோம்.

1

அனுமனைக் கண்டதுமே ஸ்ரீராமர், "நான் என் சகோதரன் லட்சுமணனை எந்த அளவுக்கு நேசிக்கிறேனோ, அதைப் போன்று இரண்டு மடங்கு அளவு உன்னை நான் நேசிக்கிறேன்', என்று சொல்லுகிறார்.

சபரியின் ஆசிரமத்திற்குச் சென்று அவளது விருந்துபசாரத்தை எம்பெருமான் ஸ்ரீராமர் ஏற்றுக் கொள்கிறார். சபரி மிகவும் பக்தி சிரத்தையோடு ராம லட்சுமணர்களுக்கு உணவு அளித்தாள். அவர்கள் தங்குவதற்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுத்தாள்.

சீதையின் பிரிவினால் ராமபிரானுக்கு ஏற்பட்டிருந்த மகத்தான சோகத்தைப் போக்க வழி சொல்லும் வகையில் சபரி, ராமரையும் லட்சுமணரையும் பம்பை நதிக்குப் போகச் சொல்லுகிறாள்.

அவள் அவ்விதம் கூறியதற்கு என்ன காரணம்? அங்கேதான் அருகில் ரிசியமுக பர்வதத்தில் சுக்கிரீவன் வசிக்கிறான். சுக்கிரீவனுடன் நட்புக் கொள்ளும்படி சபரி ராமருக்கு ஆலோசனை கூறுகிறாள்.

சபரி ஏன் அந்த இடத்தில் ராமரிடம் அனுமனின் பெயரையே சொல்லவில்லை? அதற்குக் காரணம், அவளுக்கு அனுமனின் பெயர் தெரியாது! ஆகவேதான் சபரி அனுமனைப்பற்றி ராமரிடம் எதுவுமே சொல்லவில்லை.

அனுமான் உண்மையான தொண்டன். முதலாவது தரத்தைச் சேர்ந்த உத்தம கர்மயோகியாக விளங்கினார். அவர் தம்மைப் பின்னணியில் வைத்துக்கொண்டு, செய்ய வேண்டிய கடமைகளைச் செய்தார். புகழுக்காக அவர் தமக்கு முக்கியத்துவம் அளித்துத் தம்மைப் பிரதானமாக முன்னணியில் வைத்து ஒரு காரியமும் செய்யவில்லை.

'கண்ணுக்குப் புலனாகாமலும், சத்தம் செய்யாமலும் வானத்திலிருந்து இறங்கும் பனித்துளி அழகிற் சிறந்த ரோஜா மொட்டுக்களை மலரச் செய்கிறது' என்பதற்கேற்ப, தம் கடமைகளை ஆரவாரமின்றிச் செய்பவராக ஆஞ்சநேயர் விளங்கினார். அவர் தமது பெயர் பறையறையப்படுவதற்காகத் தொண்டு செய்பவராக இல்லை. அவர் ஆர்ப்பாட்டமின்றி அமைதியாகச் சேவை புரிபவராக இருந்ததனால், அவரது பெயர் சபரிக்குத் தெரியாமலே இருந்தது. எனவேதான் சுக்கிரீவனைப்பற்றி அவள் ராமருக்குச் சொன்னபோது அனுமனைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை.

2

ராமருக்கு, சுக்கிரீவனைச் சந்தித்து நட்புக் கொள்ள வேண்டும் என்றுதான் அறிவுரை சொல்லப்பட்டதே தவிர, வாலியுடன் நட்புக் கொள்ள வேண்டும் என்று சொல்லப்படவே இல்லை. சுக்கிரீவனுடன் நட்புக் கொள்ளும்படி அறிவுரை சொல்லப்பட்ட அன்றைய தினமே,

வாலியுடன் நட்புக் கொள்ள வேண்டாம் என்ற அறிவுரையும் ராமருக்கு அமைந்துவிடுகிறது.

வாலியோடு ராமர் தொடர்பு கொண்டிருந்தால், ராமருக்கு வாலி மிகவும் உதவியிருக்கக் கூடும். ஆனால் அவ்விதம் நேர்ந்திருக்குமேயானால் ஆஞ்சனேயரின் பெருமையை உலகம் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பு இல்லாமலே போயிருக்கும்.

3

சுக்ரீவனைத் தேடிக்கொண்டு ராமபிரான் லட்சுமணனோடு வருகிறார். சுக்கிரீவன் மிகத் தொலைவிலேயே அவர்களைப் பார்த்துவிடுகிறான். ராமரைப் பார்த்த மாத்திரத்திலேயே அவரது வீரத்தையும் பராக்கிரமத்தையும் சுக்கிரீவன் எடை போட்டுவிடுகிறான். அவர்கள் இருவரும் வாலியினால் அனுப்பப்பட்டவர்களாகத்தான் இருக்க வேண்டும் என்று அவன் தீர்மானிக்கிறான்.

வாலிக்கு இருக்கும் சாபத்தின் தன்மையை உணர்ந்தே சுக்கிரிவன் பாதுகாப்பான இடம் தனக்கு இது ஒன்றுதான் என்று தீர்மானித்து ரிசியமுக பர்வதத்தில் வசித்து வருகிறான். ராம லட்சுமணர்களைக் கண்டதும், 'ஐயோ! இப்போது இந்த இடத்திலும் எனக்கு ஆபத்து வந்துவிட்டதே! நான் என்ன செய்வது? வேறு எங்காவது ஓடிச் சென்றுதான் தப்பித்துக் கொள்ள வேண்டும்' எனத் தீர்மானம் செய்கிறான்.

எனவே அவன், அனுமனிடம், "தூரத்தில் வந்துகொண்டிருக்கும் அவர்கள் இருவரும் யார்? எதற்காக இங்கே வருகிறார்கள்? அவர்களைப்பற்றிய விவரங்களைத் தெரிந்துகொண்டு வா" என்று கூறுகிறான்.

அத்துடன் சுக்கிரீவன் உடனே வாலியிடம் தனக்கு உள்ள பயம் காரணமாக அந்த இடத்தை விட்டே ஓட நினைத்ததனால் அனுமனிடம், "நீ போய்ப் பார்! அவர்கள் வாலியினால் அனுப்பப்பட்டவர்கள் எனத் தெரிந்தால், உடனே எனக்கு அதைச் சைகையின் மூலம் தெரியப்படுத்து. நான் உடனே இந்த இடத்தை விட்டு ஓடிவிடுகிறேன்" என்று கூறினான்.

4

துளசிதாசர் தமது ராமாயணம் முழுவதிலும் ஸ்ரீராமபிரானை சாட்சாத் பரப்பிரம்மமாகவே சித்திரித்துள்ளார். அந்த வகையில் துளசி ராமாயணத்தைத் தழுவி அனுமனும் ராமரும் சந்திக்கும் பகுதி கீழே தரப்படுகிறது.

அனுமன் அந்தணப் பிரம்மசாரியின் வேடத்தில் ராமரைச் சென்றடைந்து அவரது இணையடி மலரில் வீழ்ந்து வணங்கி, "சுவாமி! தாங்கள் யார்?" என்று நேரிடையாகவே கேட்கிறார்.

அனுமன் தமது கால்களில் வீழ்ந்து வணங்கும் போதே ஸ்ரீராமரின் முகத்தில் புன்னகை தவழ்கிறது. அவர் புன்னகை மாறாத முகத்துடனேயே அனுமனை நோக்கி, "க்ஷத்திரியனை அந்தணர் ஒருவர் வீழ்ந்து வணங்குவது நடைமுறையில் இல்லாதது அல்லவா? உனக்கு நடிக்கவும் தெரியவில்லை, வேடம் புனையவும் தெரியவில்லை. நானோ க்ஷத்திரியன். அந்தண வேடத்துடன் வந்திருக்கும் நீ, அந்த வேடத்தை ஒட்டி அதற்கேற்ப நடிக்க வேண்டாமா? நீ ஏன் என்னை வணங்குகிறாய்? அதனால் நீ ஏற்றிருக்கும் உன் பாத்திரத்தைச் சரியாகச் செய்யவில்லை" என்கிறார்.

அனுமன் :- தாங்கள் யார் என்று அறிந்து கொள்ள வேண்டும் என்ற உண்மையான ஆவலால் உந்தப்பட்டே இவ்வாறு கேட்டேன். மற்றப்படி தங்களைச் சோதிக்க வேண்டும் என்பது என் நோக்கமே அல்ல. கடவுள் சோதித்துப் பார்ப்பதற்கு உரிய பொருள் அல்ல. எனவேதான் நேரிடையாகவே தாங்கள் யார் எனக் கேட்கிறேன்.

ஸ்ரீராமர் :- (நேரிடையாகப் பதில் எதுவும் சொல்லாமல்) நீ வேண்டுமானால் என்னைச் சோதித்துப் பார்க்க விரும்பாமல் இருக்கலாம். ஆனால் உன்னைச் சோதிக்க எனக்கு எல்லா விதமான உரிமைகளும் உண்டு. (மிகவும் விளையாட்டாக) ஆமாம், நீ என்னைப்பற்றி என்னதான் நினைக்கிறாய்?

அனுமன் :- சொல்லட்டுமா? ஒருவரின் நிறம் கறுப்பு, மற்றொருவரின் நிறம் சிவப்பு. தாங்கள் என்னை என் அபிப்பிராயத்தைக் கூறும்படி வற்புறுத்தியதனால், இதோ சொல்கிறேன்.

இப்போது சற்று நேரத்திற்கு முன்புதான் தாங்கள் தங்களை ஒரு க்ஷத்திரியன் என்று குறிப்பிட்டீர்கள். ஆனால் நீங்கள் உண்மையிலேயே க்ஷத்திரியர் அல்ல. உங்களுடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கும்போதே 'இவர் க்ஷத்திரியரே அல்ல' என்று என் தலை (புத்தி) கூறியது. எனவே தாங்கள் சாட்சாத் கடவுளேதான். தாங்கள் தாம் பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற மூவருள் ஒருவரா? அன்றி நீங்கள் இருவரும்தாம் நர நாராயணர் என்று சொல்லப்படும் முனிவர்களா? நீங்கள் இருவரும் இந்த மண்ணுலகில் துன்பப்படும் முனிவர்களின் துயர் துடைக்க அவதரித்தவர்கள் என்றே எண்ணுகிறேன்.

ஸ்ரீராமர் :- அப்பா! நாங்கள் கடவுளும் அல்ல. நர நாராயணர்களும் அல்ல. நாங்கள் இருவரும் அயோத்தி மன்னனான தசரத சக்கரவர்த்தியின் குமாரர்கள். நாங்கள் தந்தையின் கட்டளைக்குப் பணிந்து கானகம் வந்துள்ளோம். என் மனைவி வைதேகியை எவனோ ஓர் அரக்கன் தூக்கிச் சென்றுவிட்டான். நான் இப்போது என் மனைவியைத் தேடி அலைந்துகொண்டிருக்கிறேன்.

அனுமன் :- தாங்கள் சொல்வதை நான் நம்ப வேண்டும் என்கிறீர்களா? தாங்கள் கடவுளே தான். கடவுளுக்குத்தான் பிறப்பு இறப்பே கிடையாது, அவர் எங்கும் நிறைந்தவர், சுதந்திரமானவர், சர்வ வல்லமை பெற்றவர், சர்வமும் அறிந்தவர்.

ஸ்ரீராமர் :- இதோ, நீ சொல்வது தவறு என்று இப்போதே உனக்கு விளக்குகிறேன். நான் கடவுள் என்பதற்கு நீ குறிப்பிடும் முதலாவது பண்பு, நான் தசரத சக்கரவர்த்திக்கு மகனாகப் பிறந்தவன் என்பதனால் நீங்கிவிடுகிறது. கடவுள் எங்கும் நிறைந்தவர் என்று கூறினாய். நானோ உன் கண்முன்னால் மட்டும்தான் நின்றுகொண்டிருக்கிறேன். மூன்றாவதாகக் கடவுள் சுதந்திரமானவர் என்றாய். நானோ தந்தையின் சொல்லுக்குக் கட்டுப்பட்டுக் கானகம் வந்துள்ளேன். கடவுள் சர்வவல்லமை உடையவர் என்கிறாய். அப்படி இருந்தால் என் மனைவியை எப்படி வேறொருவன் எடுத்துச் சென்றிருக்க முடியும்? கடைசியாக, கடவுள் எல்லாவற்றையும் அறிந்தவர் என்று சொன்னாய். நானோ மனைவி இருக்கும் இடம் எது என்று தெரியாமல் அவளைத் தேடிக்கொண்டு அலைகிறேன்.

அனுமன் :- சரி, நீங்களேதான் உங்கள் கதையைச் சொல்லுங்களேன்.

ஆனால் ஸ்ரீராமர் அனுமன் கேட்டதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் பேச்சை மாற்றிவிடுகிறார்.

மாருதி ராமரின் பாதங்களில் வீழ்ந்து தம் கைகளால் கட்டிக்கொண்டுவிடுகிறார்.

ஸ்ரீராமர், "நான் ஒன்றுக்குமே தகுதியற்றவன். அப்படி இருந்தும் நீ ஏன் என்னைப் புகழ்கிறாய்?" என்று கேட்கிறார்.

ஆனால் மகாபக்தனான அனுமனுக்கா பகவானைத் தெரியாமல் போய்விடும்?

நிர்க்குணப் பிரம்மம் நமது புல்லறிவுக்கு எட்டாதது. சாதாரண மனித மனம் அதை எண்ணிப் பார்க்கும் திறமையற்றது. வார்த்தைகளால் அதை வர்ணிக்கவும் இயலாது. ஆகவே தான், இந்தப் பூவுலகில் எச்சில்படாத ஒரே வஸ்து நிர்க்குணப் பிரம்மம் மட்டுமே ஆகும் என்று ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் குறிப்பிட்டார். நிர்க்குணப் பிரம்மம் என்றென்றும் ஒரே நிலையில் இருப்பது. அதில் எந்த விதமான மாற்றமும் எக்காலத்திலும் ஏற்படாது.

அனுமன் :- சுவாமி! நான் தங்களை வணங்கியபோது என் தலை (அறிவு) தாங்கள் நிர்க்குணப் பிரம்மம்தான் என்று வலியுறுத்திக் கூறியது. அதன்படி நிர்க்குணப் பிரம்மத்தை ஒருவர் உணர்ந்து மட்டும்தான் அனுபவிக்க முடியுமே தவிர, எவராலும் அதை வர்ணித்துவிட இயலாது. மேலும், கடவுள் அவதாரம் செய்கிறார். அப்படி அவர் அவதாரம் எடுக்கும்போது பெற்றோருக்குக் கீழ்ப்படியலாம், மனைவியையும் தேடலாம். எனவே தாங்கள் கூறியபடியே பார்த்தாலுங்கூடத் தாங்கள் கடவுள்தாம் என்பது தெளிவாகிறது.

சொல்லின் செல்வர் அல்லவா ஆஞ்சனேயர்? அவருக்குப் பேசவும் கற்றுத்தர வேண்டுமா?

அனுமன் :- பிரபு ராமா! நான் தங்களைக் கடவுளாகவே ஏற்றுக்கொண்டு விட்டேன். நீங்கள் வேண்டுமானால் தங்களைக் கடவுள்

இல்லை என்று கூறலாம். தாங்கள் சொல்கிறீர்கள் என்பதற்காகத் தாங்கள் கூறுவதை நான் ஒப்புக்கொண்டாலும் என் உள்ளம் என்னவோ தங்களைக் கடவுளாகத்தான் காண்கிறது. தாங்கள் என்னைத் தங்களுடைய சேவகனாக ஏற்றுக்கொள்ள வேண்டும். எனக்கு உங்களைத் தெரியாது. அதனால் தெரிந்துகொள்வதற்காகத் தங்களைப்பற்றிக் கேட்டேன். ஆனால் தாங்கள் என்னைக் குறித்துத் தெரிந்துகொள்வதுதான் நல்லது. நான் மாயையினால் படைக்கப்பட்டவன். தங்களைப் போன்றவர் அவ்விதம் என்னைப்பற்றிக் கேட்பதும் அவ்வளவு சிறந்ததல்ல அல்லவா?

ஸ்ரீராமர் :– நீ என்னைப்பற்றிக் கேட்டாய் அல்லவா? அதற்காகவே நானும் உன்னைப் பற்றிக் கேட்டு வைக்கிறேன். இல்லாவிட்டால் உன் மனம் புண்படுமே! அதனால் சம்பிரதாயத்திற்காயினும் உன்னைப்பற்றிக் கேட்கிறேன். நீ உன்னைப்பற்றிச் சொல்.

அனுமன் :- நான் மந்தமானவன்.

ஸ்ரீராமபிரானின் முன்பு தம்மை அவையடக்கத்துடன் வைத்துக் கொள்வதற்காகவே, தம்மை மந்தபுத்தி உள்ள ஒருவன் என்று ஆஞ்சனேயர் குறிப்பிட்டார். 'மந்த' என்ற சொல் காற்றைத் தழுவும்போது மிருதுவான காற்று என்று ஆகிறது. மந்தமாருதம் அனைவராலும் விரும்பப்படுகிறது.

ஸ்ரீராமர் :- நான் உன்னைப்பற்றிச் சொல் என்று கேட்டால், நீ உன்னை மிருதுவானவன் என்று சொல்கிறாயே! (ஸ்ரீராமர் வேண்டுமென்றே காற்று என்ற பொருள் கொள்ளவில்லை.) அது காற்றின் சிறந்த தன்மையை அல்லவா குறிக்கிறது? காற்றின் தன்மையை உன்னுடைய தாக்கிச் சொல்கிறாய்; சரி, அப்படியானால் காற்றின் மற்ற இரண்டு முக்கியமான தன்மைகளான குளிர்ச்சி வாசனை ஆகிய இரண்டையும் விட்டுவிட்டாயே!

அனுமன் :- சுவாமி! தாங்கள் கூறுவதை நான் அப்படியே ஒப்புக்கொள்கிறேன். நான் மந்தமானவன்தான், அதாவது மிருதுவானவன் நான். ஆனால் நான் மறந்துவிட்டதாகத் தாங்கள் கூறிய இரண்டு குணங்களும் தங்களிடமிருந்து கடன் வாங்கப்பட்டவையே ஆகும். கோடைக் காலத்தில் எப்போதும் குளிர்ந்த காற்றைப் பெற முடியுமா? எப்போதும் காற்றில் நறுமணம் மட்டுமே நிரம்பியிருக்க முடியுமா? எனவே பரந்தாமா, என் வருத்தத்தை நீக்கி என்னைக் கடைத்தேற்றத் தாங்கள் என்னைத் தங்கள் அடிமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இதுவே எனது அந்தரங்க உள்ளத்தின் பிரார்த்தனை.

அனுமன் தமக்கு அறிவு கிடையாது, தாம் மந்தமானவர் என்று சொல்லக் கேட்ட ஸ்ரீராமர் அவரை அப்படியே கட்டித் தழுவிக் கொண்டு கண்ணீர்விடுகிறார். ஸ்ரீராமபிரானின் கண்ணீரால் ஸ்ரீஆஞ்சனேயர் அப்படியே சொட்டச் சொட்ட நனைந்துவிடுகிறார்.

துளசிதாசர் தமது ராமாயணத்தில் ஸ்ரீராமபிரான் கண்ணீர் விட்டதாக வர்ணித்துள்ள காட்சிகளில் இதுவும் ஒன்றாகும். இதில் கடவுளின் கண்ணீரால் நனையும் பேறு பெற்றவராகிறார் ஆஞ்சனேயர். வேறு எங்கெல்லாம் ஸ்ரீராமர் தமது கண்ணீரால் அடியார்களை நீராட்டுகிறார் என்பது தெரியவில்லை.

ஆஞ்சனேயர் ஸ்ரீராமபிரானின் பாதாரவிந்தங்களையே துணையாக நாடுகிறார். ஒரு குழந்தை எவ்விதம் தாயைப் பற்றியிருக்குமோ, அது போலவே அனுமனும் ஸ்ரீராமரைத் தஞ்சமடைகிறார்.

ஸ்ரீராமரது செய்கையால் அனுமனின் உடலில் புளகாங்கிதம் ஏற்பட்டு ரோமங்கள் குத்திட்டு நிற்கின்றன. அனுமனின் கண்களிலிருந்து நீர் வரவில்லை. ஸ்ரீஆஞ்சனேயர் சொல்கிறார் —

"என் உடலில் சூடுதான் இருக்கிறது. ஒரே உஷ்ணம்தான். குளிர்ச்சியே கிடையாது. மழை பெய்யும்போது காய்ந்துபோன பயிர்கள் தாமாகவே தழைத்துப் பசுமையுடன் காட்சியளிக்கின்றன. அது போன்று தங்களது கண்ணீர் பட்டுக் குளிர்ச்சி அடைந்த என் உடலில் உள்ள ரோமங்கள் குத்திட்டு மாரிக் காலத்துப் புல்பூண்டுகள் போல் தலைதூக்கி நிற்கின்றன."

ஸ்ரீராமரிடம் மேலும் அனுமன் கூறியதாவது— "மேகங்கள் உண்டாவதற்குச்

சூரியனின் உஷ்ணம் தேவைப்படுகிறது. மறு படியும் அதே மேகங்கள் குளிர்ச்சி அடைந்து மழையாகப் பொழிகின்றன. என்னிடமோ குளிர்ச்சி என்பதே இல்லை, ஒரே வெப்பம்தான். என்னுள் இருக்கும் அந்த வெப்பம்தான் கண்ணீரை உலரச் செய்கிறது. தாங்கள் கண்ணீர் என்ற மழையைப் பொழிந்தீர்கள். ஆகவேதான் என் உடலாகிய தோட்டத்திலுள்ள ரோமங்கள் என்ற பயிர்கள் செழுமையுடன் தலை தூக்கி நிற்கின்றன. எம்பெருமானே! தங்களுடைய கருணை கிட்டும்வரை என்னால் எதுவுமே செய்ய முடியாது!''

ஒரு முறை சீதாதேவி அனுமனைப் பார்த்து, ''உனது பார்வை என்னுள் குளிர்ச்சியை உண்டு பண்ணுகிறது'' என்றார்.

அதற்கு ஆஞ்சனேயர் மிகவும் பணிவோடும் பக்தியோடும், ''அந்தக் குளிர்ச்சி உண்டாவதற்குக் காரணம் எம்பெருமான் ஸ்ரீராமரின் கிருபா கடாட்சம்தான்'' என்று பதில் தெரிவித்தார்.

எந்த ஒரு நல்ல விஷயத்திற்கும் காரண காரியங்களையெல்லாம் ஸ்ரீராமரின் நற்குணங்களின் மீதே அனுமன் சுமத்துகிறார். அவர் தம்முடையது என்று எந்தச் செயலுக்குமே உரிமை பாராட்டவில்லை.

★ ★ ★

புதிய புத்தகங்கள்

1. கந்தவேள் கதையமுதம்

கச்சியப்ப சிவாசாரியார் அருளிய கந்தபுராணம்.

[ஆசிரியர் : கி. வா. ஜகந்நாதன், வெளியிட்டோர் : கந்தவேல் பதிப்பகம், 146, சூளைமேடு நெடுஞ்சாலை, சென்னை-600 094. பக்கம் 583 + xiv. விலை : ரூ. 45]

2. திருத்தணிகைச் சந்நிதிமுறை

சந்நிதிமுறைப் பிரபந்தங்கள் 12, தணிகை பற்றிய வேறு சில சிறு பிரபந்தங்கள், படங்களுடன் கூடிய தல வரலாறு, கல்வெட்டு, செப்பேடுகள் முதலியன அடங்கியுள்ளன.

[பதிப்பாசிரியர் : மு. சண்முகம் பிள்ளை, வெளியிட்டோர் : தி. கி. நாராயணசாமி, 2, சீதாராம நகர், கடலூர்-607 001. பக்கம் 314, விலை : ரூ. 20]

3. பரமார்த்த தீபம் என்னும் குருவாசகக் கோவை

பகவான் ஸ்ரீரமணரின் சித்தாந்தத்தை விளக்கும் உரைநூல்.

[மூல நூலாசிரியர் : ஸ்ரீ முருகனார். உரையாசிரியர் : ஸ்ரீ சாது ஓம், நூல் கிடைக்கும் இடம் : ஸ்ரீரமணாச்ரமம் புத்தகசாலை, திருவண்ணாமலை-606 603. பக்கம் 431 + x. விலை : ரூ. 15]

4. எனது நினைவுகள்

ஸ்ரீரமண பகவானைப் பற்றிய ஞாபகக் குறிப்புகள் அடங்கிய நூல் [ஆசிரியர் : குற்றேவல் குஞ்சு சுவாமி, வெளியிட்டோர் : ஸ்ரீரமணாச்ரமம், திருவண்ணாமலை-606 603. பக்கம் 378 + xvi. விலை : ரூ. 10-50]

5. நல்வாழ்வு வாழ !

பொது அறிவுக் குறிப்புகள் அடங்கியது.

[ஆசிரியர் : சி. யு. நஞ்சப்பா, வெளியீட்டோர் : முருகானந்த நிலையம், சிக்காரம்பாளையம் அஞ்சல், கரமடை வழி-641 104, கோயமுத்தூர். பக்கம் 52, விலை ; ரூ. 2-50]

6. கடோபநிஷதம்

கடோபநிஷதம் தமிழில் செய்யுள் நடையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

[வெளியிட்டோர் : ஸ்ரீராமநாம முருகன் தேவஸ்தானம், பள்ளிப்பாளையம், ஈரோடு-638 006. பக்கம் 36, விலை : 70 காசு]

சங்கரரின் தத்துவம்

சுவாமி அமலாத்மானந்தர்

சங்கரர் மிகுந்த அறிவுபூர்வமானவையும், மிகவும் உயர்ந்தவையுமான விளக்க உரைகளை உபநிஷதங்களுக்கும் பகவத்கீதைக்கும் பிரம்மசூத்திரத்திற்கும் இயற்றினார். இந்த உரைகள் அனைத்திலும் அவருடைய தத்துவம் விளக்கமாக விவரிக்கப்பட்டுள்ளது.

சங்கரரின் இந்தத் தத்துவம் பிற்காலத்தில் 'கேவல அத்வைதம்' என்ற பெயரில் சிறப்போடு அழைக்கப்பெற்று, இன்று மிக்க புகழ் வாய்ந்ததாக உள்ளது. சங்கரர் இந்தத் தத்துவத்தை மிகவும் உயர்ந்ததாக நிலைநாட்டுவதற்குக் கைக்கொண்ட முக்கியமான கருவி 'அவித்யை'யும் மாயையுமாகும்.



சங்கரரின் இந்தத் தத்துவப்படி, சுயஉணர்வு ஒன்றே எல்லா வகையான ஞானத்திற்கும் அடிப்படையாகும்.

ஆத்மா என்று இருப்பதை யாராலும் மறுக்க முடியாது. அப்படி மறுத்தார்களானால் அவர்கள் தாங்கள் இருப்பதையே மறுக்கிறார்கள். ஏனென்றால் ஆத்மாவை மறுத்து நம் எதிரில் பேசுபவரே ஆத்மாவின் உருவாக்கம்தான். எவனும் தான் உயிரோடு இருந்துகொண்டு 'தான் இல்லை' என்று சொல்ல முடியாது. ஆத்மா எப்போதும் சுதந்திரமானது; எதையும் சார்ந்திருக்காமல் தனித்துத் தானே வாழும் ஆற்றல் பெற்றது. ஆத்மா அளவற்ற ஞானம் மட்டும் அல்ல; அளவற்ற பேரின்பமுமாகும் என்பது சங்கரரின் தத்துவமாகும்.

சங்கரர் வேதங்களை மிக உயர்ந்த பிரமாணமாக ஏற்றுக்கொண்டார். ஏனென்றால் அவை அழியாதவை; மனிதர்களின் அறிவால் தோன்றாமல் தாமே தெய்வத்திடமிருந்து தோன்றியவை. எனவே மாந்தர் செய்யக்கூடிய எந்த விதமான தவறுகளும் வேதத்தில் இல்லை.

வேதங்கள் என்றுமே அழியாத, எப்போதும் நிலைத்திருக்கும் பரப்பிரம்மத்தின் ஞானவடிவமாகத் திகழ்கின்றன என்பதும் சங்கரரின் முடிவாகும். சங்கரரின் கருத்துப்படி, வேதங்களின் உண்மையான ஞானத்தை ஒருவன் அடைய வேண்டுமென்றால், அவன் இருபிறப்பாளன் எனப்படும் பிரம்மசாரியாகவும், சந்நியாசியாகவும் ஆகவேண்டும்.

சங்கரருடைய தத்துவத்தில், வேலை செய்வதும் வழிபாடு செய்வதும் மனத்தைத் தூய்மைப்படுத்துவதற்கான வழிகளாகக் கொள்ளப்பட்டு, பிரம்மஞானத்தை அறிவதற்கான துணைவழிகளாகக் கொள்ளப்படுகிறது. ஆனால் ஞானத்தோடு அது சேர்வது என்பது சங்கரரின் கருத்துப்படி என்றுமே நடக்க முடியாததாகும்.

பகவத்கீதைக்கு உரை வகுத்தபோது, 'சுயலாபம் கருதிச் செய்யும் வேலை எல்லா வகையான பந்தங்களுக்கும் காரணம்' என்று சங்கரர் கூறுகிறார். சுயநலம் கருதாது செய்யும் வேலையின் மிகச் சிறந்த மதிப்பை அவர் ஏற்றுக்கொள்ளுகிறார். யார் ஆன்மிக விடுதலையை விரும்பி, இதுவரை விடுதலை பெறவில்லையோ, அவர்கள் அந்த ஆன்மிக விடுதலைக்கு அடிப்படையான மனத் தூய்மையைப் பெறுவதற்கு, பயன் கருதாத கர்மம் சரியான வழியாகக் குறிப்பிடப்படுகிறது.

பயன் கருதாமல் வேலைகளைச் செய்வதனால் மட்டுமே உள்ளத்தின் அழுக்குகளை அழிக்க முடியுமே அல்லாமல் வேலைகளையே செய்யாமல் விட்டுவிடுவதனால் மனத் தூய்மையை அடைய முடியாது. அறியாமை நிறைந்தவர்களுக்கு, அவர்கள் ஞானத்தையும் மோட்சத்தையும் அடைவதற்குத் தகுதியானவர்களாக இருந்தாலும், பயன் கருதாமல் பணி செய்வதே மிகுந்த நன்மை செய்வதாகும்.

இவையெல்லாம் சங்கரரின் தத்துவத்தில் கூறப்படும் கருத்துக்களாகும். எனவே சங்கரர் ஞானத்தை மட்டுமே பேசியிருக்கிறார், கர் மத்தைப்பற்றிப் பேசவே இல்லை என்று கூறுவது நியாயமாகாது. ஏனெனில், அவரே பயன் கருதாமல் வாழ்நாள் முழுவதும் ஒவ்வொரு விநாடியும் காரியங்கள் செய்து, பயன் கருதாது பணிபுரிவது மிகவும் தேவையானது என்பதை உலகிற்குக் காட்டியுள்ளார்.

சங்கரருடைய தத்துவத்தில் உலகமும் அதனுடைய அழியாத நிலைப்பும் ஒன்றையொன்று சுற்றிச் சூழ்ந்திருக்கும் நிலை என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

மனம் எவ்வளவு காலம் இருக்கிறதோ அது வரை உலகமும் இருக்கிறது. இந்த மனம் இல்லாதுபோகும்போது உலகமாகிய மாயை மறைந்துவிடுகிறது. மனம்தான் உலகத்தை உருவாக்குகிறது. அதனால் இந்த உலகம் மித்யை என்று அழைக்கப்படுகிறது. மித்யை என் பதற்கு, 'இல்லாத ஒன்று' என்பது பொருள். உதாரணமாகக் கயிற்றைப் பாம்பு என்று தவறாக நினைப்பது.

குணம் வடிவத்தோடு இருக்கும் பிரம்மமும் அவை இல்லாது இருக்கும் பிரம்மமும் இறுதியில் ஒன்றேயாகும். அதாவது நிர்க்குணப் பிரம்மம் தனது மாயா உபாதிகள் அல்லது மாயையின் கட்டுப்பாட்டால் சகுணப் பிரம்ம மாக மாறுகிறது.

இந்த அண்ட சராசரங்களின் தோற்றம், சகுணப் பிரம்மம் தன் மாயையோடு நடத்தும் விளையாட்டின் விளைவேயாகும். இந்தச் சகுணப் பிரம்மம்தான் இந்த அண்டசராசரங்களின் உட லும் உயிரும் தோன்றுவதற்கான அடிப்படைக் காரணமாகும்.

நிர்க்குணப் பிரம்மத்தின் நிலையிலிருந்து பார்க் கும்போது, இந்த உலகம் அண்டசராசரங்கள் என்று எதுவுமே கிடையாது.

சங்கரர் ஆத்மா தன்னைப் பிரம்மத்தோடு நேராக இணைத்துக்கொள்வதற்காகத் துடிக்கும் காரணத்தை விளக்கும்போது, பக்தி அல்லது பிரேமையே அதற்கான காரணம் என்று கூறு கிறார். பிரிவால் ஏற்படுகிற வேதனை இந்தப் பக்தியில் இருப்பதில்லை. ஏனென்றால், பிரிவே இல்லாத, எப்போதும் கடவுளிடமே ஐக்கியப் பட்டிருக்கும் நிலை அது. மோட்சம் அல்லது விடுதலை என்பது நிர்க்குணப் பிரம்மத்தை அடைந்த பிறகு கிடைக்கும்.

உயிரோடு இருக்கும்போதே விடுதலை பெற்று விடுகிற 'ஜீவன்முக்தி' என்ற நிலையைச் சங்கரர் ஏற்றுக்கொள்ளுகிறார். மோட்சம் என்னும் மிகவும் மேலான இன்பத்தை இந்த உலகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும்போதே பெறமுடியும். அந்த நிலையில் உலகின் நிலையில்லாத தன்மை மிக மிகத் தெளிவாக ஜீவன்முக்தருக்கு விளங்கும். இந்தப் பிறவியில் உடல் எடுத்ததற்குக் காரணமாக இருந்த பிராரப்த கர்மாவை அனுபவித்து முடிந்ததும் உடம்பு விழுந்துவிடும். அதன்பிறகு இவர்கள் முக்தியை அடைவார்கள். இந்த முக்தி 'விதேக முக்தி' அதாவது உடல் நீங்கியதும் பெறும் முக்தி என்று அழைக்கப்படும்.

விடுதலை அல்லது மோட்சம் என்று கூறுவது, ஒருவன் பிரம்மத்தோடு தனக்கு அமைந் திருக்கிற உண்மையான தன் சொந்த இயல்பை அறிந்துகொள்வது என்பது தவிர வேறு எதுவு மில்லை.

விதேக முக்தியில் ஆத்மாவும் பிரம்மமும், ஒரு பானை நொறுக்கப்பட்டவுடனே அதற்குள் இருக்கும் வெற்றிடமும், அதற்கு வெளியே இருக்கும் வெற்றிடமும் உள்ளும் புறமும் ஒன்றாக இணைவது போல், பிரம்மத்தைத் தடுத் துத் தனியாக்கும் பரு உடம்பு என்றும், நுட்ப உடம்பு என்றும், காரண உடம்பு என்றும் வடி வெடுத்த மாயை அழிக்கப்படும்போது பிரம்மம் மட்டுமே அழியாமல் நிற்கிறது.

சங்கரரின் கருத்துப்படி, அத்வைத தத்துவம் தான் மிகவும் உயர்ந்த தத்துவமாகும். மற்றத் தத்துவங்கள் எல்லாம் இதற்கான கீழான படிகளே. உயிர்களின் இயல்பைப் பற்றிச் சங்கரர் சொல்லும்போது, தனி உயிர் என்பது மனம், புத்தி, அறிவு, நினைவு, 'நான்' என்னும் தனி நினைப்பு—இவற்றால் பிரம்மம் கட்டப்படும் போது பிரம்மம் எடுக்கும் வடிவமே என்று கூறுகிறார்.

பிரம்மஞானத்தை அடைந்து உயிர் 'தான் பிரம்மம்' என்பதை அறியும்போது, இது வரை மாயை காரணமாக உடம்பே நான் என்று நினைத்துக்கொண்டிருந்த மாயை அழிந்து விடுகிறது. சங்கரரின் வேதாந்தத்தில் இந்தக் கருத்து, பிரம்மம் — ஆன்மாவைப் பற்றிய தத்துவத்தின் மிகச் சிறந்த முடிவாகும். 'தான் பிரம்மம்' என்று ஜீவன் அறியும் அறிவே மிகச் சிறந்த ஞானம் என்று சங்கரர் கூறுகிறார்.

சங்கரர் மிகச் சிறந்த அத்வைதியாக இருந்தாலும் அவரிடம் ஒரே ஓர் அங்குலம்கூடக் குறுகிய மனப்பான்மை இல்லை. சாங்கியம்—யோக தத்துவங்களின் பல கொள்கைகளை அவர் ஏற்றுக்கொண்டு, தியானத்திற்கு அவற்றையெல்லாம் துணைவழிகளாக அமைத்துள்ளார்.

ஆனால் இந்தத் தத்துவங்கள் ஆன்மாவிற்குக் கூறும் இரண்டு நிலைகளை[1], வேதங்களின் கருத்திற்கு முற்றும் எதிரானவை என்று உறுதியாகக் கூறியுள்ளார். "அந்தத் தத்துவங்களை இந்த அடிப்படையில்தான் ஏற்றுக்கொள்ள முடியாது" என்றும் கூறுகிறார். அதோடு புத்த கயாவில் உள்ள புத்தரின் முதன்மையான கோயிலில், அவர் புத்தரை மகாவிஷ்ணுவின் அவதாரம் என்று வழிபாடு செய்தார்.

பலவேறு கடவுளரையும் பெண்தெய்வங்களையும் இனிமையான ஸ்தோத்திரங்கள் இயற்றி அவர் வழிபட்டது ஆச்சரியகரமான காரியமாகும். அவருடைய தோத்திரப் பாடல்கள் அவருடைய உரைகளைக்காட்டிலும் மிகவும் புகழ் பெற்றவையாக விளங்குகின்றன.

எல்லாச் சாஸ்திரங்களிலும் துறைபோன அறிஞராக இருந்தாலும் சங்கரர் வறண்டு போன பண்டிதர் அல்ல. அவருடைய தத்துவம் நேரிடையாக அவர் உணர்ந்த உண்மைகளிலிருந்து உருவாக்கப்பட்டது. சாஸ்திரப் படிப்பை முற்றும் நீக்கிவிட்டுத் தமது சொந்த ஆன்மிக அனுபவத்தை மட்டுமே கொண்டு விவேகசூடாமணி என்னும் நூலை இயற்றினார். அதில், 'வார்த்தை மழைகளால் இடிபோன்ற பேச்சும், சாஸ்திரங்களின் கருத்துக்களை விளக்குகிற ஆற்றலும், மற்றப் பண்டிதப் புலமைகளும் பண்டிதர்களுக்கு ஏதோ கொஞ்சம் இன்பத்தைத் தரலாம். ஆனால் முக்தி பெறுவதற்கு அவை சிறிதும் உதவா' என்று கூறியுள்ளார்.

சிலர், 'சங்கரர் முற்றும் அறிவுமயமானவர், இரக்கம் என்பதே இல்லாதவர்' என்று கூறுகிறார்கள். இது உண்மையல்ல. சங்கரர் மனித இனமே பலவேறான துன்பங்களால் துடித்துக் கொண்டிருப்பதைக் கண்டு மிகவும் வேதனைப் பட்டார்.

அவர்கள் தங்களுக்குள் அளவே இல்லாத பேரின்பம் தேங்கிக் கிடப்பதை அறியாமல் துன்பப்படுகிறார்களே என்று வருந்தினார். அவர்களுக்குள் மறந்திருக்கும் இந்தப் பேரின்பத்தை அவர்கள் அறிந்துகொள்ளுவதற்கான செய்தியை, வழியை அவர்களுக்குக் கொடுத்து, அவர்களை அந்தத் துன்பங்களிலிருந்து விடுதலை செய்து, இன்பமே உருவான நிலைக்கு அழைத்துச் செல்லவே, அவர் இந்தியா முழுவதும் காலால் நடந்து பயணம் செய்தார். அத்தகைய ஒருவரை நாம் இரக்கமில்லாதவர் என்று எப்படிக் கூற முடியும்?

இன்றைய உலகம் அறிவியலாலும், கூர்மையான பகுத்தறிவாலும் அமைந்த உலகம். ஆனால் ஆயிரத்திருநூறு ஆண்டுகளுக்கு முன்பே சங்கரர் இன்று காணப்படும் அறிவியல் அடிப்படையிலும், கூர்மையான பகுத்தறிவின் அடிப்படையிலும் தமது வேதாந்த தத்துவத்தை உறுதியாக உருவாக்கினார். குறையே காண முடியாதபடி ஞானம், பக்தி, கர்மம் ஆகியவற்றின் இனிமையான இணைப்பாகவும், துறவு தவம் என்பவற்றின் சிறந்த உதாரணமாகவும் விளங்கிய மகோன்னத மகாபுருஷரான சங்கரர் தமது மிகக் குறுகிய வயதிற்குள் (32 வயதில்), இன்றைய இருபதாம் நூற்றாண்டின் விஞ்ஞானம் கண்டுபிடித்துள்ள அதிசயங்களைவிட ஆச்சரியமான கண்டுபிடிப்புகளை நிகழ்த்தி, அவற்றை நமக்கு விட்டுச் சென்றிருக்கிறார். சுவாமி விவேகானந்தர் இதைப்பற்றிச் சொல்லும்போது, "அந்தப் பதினாறு வயதுப் பாலகனின் நூல்கள் இன்றைய விஞ்ஞான உலகின்

1. பிரம்மம் வேறு, ஆன்மா வேறு; அல்லது புருஷன் வேறு, பிரகிருதி வேறு என்பது.

அற்புதங்களாக உள்ளன. அந்த நூல்கள் மட்டு மல்ல, அந்தப் பாலகனுங்கூட அப்படி அற்புத மானவன்தான்'' என்று கூறுகிறார்.

மனித சமுதாயத்தின் நன்மைக்காகத் தெய்வ லோகத்திலிருந்து பூமிக்கு வந்து, சிங்கம் போன்ற வலிமையோடும் வேகத்தோடும் செயல்புரிந்த மகானாகிய சங்கரரின் காரியங் களின் ஆழத்தைச் சாதாரண மனிதர்களால் அறிந்துகொள்ள முடியாது. இதைப் பற்றி ஓரளவு மட்டுமே, அவர் எழுதிய நூல்களின் மூலம் நாம் அறியலாம்.

சங்கரர் மகோன்னதக் கடவுளான சிவ பெருமானின் அவதாரம். வைதிக தர்மத்தை இந்தியா முழுவதும் மறுபடியும் நிலைநிறுத்துவ தற்காக அவர் தோன்றினார்.

சங்கரர் தமது அனுசாசனத்தில், ''கிருத யுகத்தில் பிரம்மா உலககுருவாக விளங்கினார். திரேதாயுகத்தில் வசிஷ்டர் உலககுருவாக விளங்கினார். வியாசர் துவாபரயுகத்தில் உலக குருவாக விளங்கினார். கலியுகத்தில் நான் உலக குருவாக விளங்குகிறேன்'' என்று எழுதி யுள்ளார்.

செய்திகள்

சென்னை, தியாகராஜநகர் ராஜாபாதர் ரோடிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் பிரைமரி பள்ளி 7—3—81-ஆம் நாள் மாலை தனது ஆண்டு விழாவைக் கொண்டாடியது. விழா விற்குத் தலைமை வகித்த சுவாமி கமலாத் மானந்தர் மாணவ மாணவியருக்கு அறநெறி குறித்து உரை நிகழ்த்தி, போட்டிகளில் வெற்றி பெற்றோருக்குப் பரிசுகள் வழங்கினார்.

சென்னை, தியாகராஜநகரிலுள்ள ஸ்ரீராம கிருஷ்ண மிஷன் (மெயின்) உயர்நிலைப் பள்ளி மார்ச் 19-ஆம் நாள் மாலை 4-30 மணிக்குத் தனது ஆண்டு விழாவைக் கொண்டாடியது. விழாவிற்குத் தலைமை வகித்த சுவாமி தன்ம யானந்தர் தமது சொற்பொழிவுக்குப் பிறகு, போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர் களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

பவானி, ஸ்ரீராமகிருஷ்ண ஜயந்திக் கமிட்டி யின் சார்பாக மார்ச் 20, 21, 22 ஆகிய தேதி களில் ரோட்டரி ஹாலில் முறையே ஸ்ரீராம கிருஷ்ணர், ஸ்ரீசாரதா தேவியார், சுவாமி விவேகானந்தர் விழாக்கள் கொண்டாடப் பெற்றன. மூன்று நாள் நிகழ்ச்சிகளிலும் சுவாமி கமலாத்மானந்தர் கலந்துகொண்டு உரையாற்றினார். அதற்கடுத்த நாட்களும் விழா நிகழ்ச்சிகள் தொடர்ந்திருந்தன. விழாவின் நிறைவு நாளாகிய 28-ஆம் தேதி நிகழ்ச்சிகள் சுவாமி சம்ப்ரக்ஞானந்தரின் தலைமையில் நடை பெற்றன.

குடியாத்தத்திலுள்ள ஸ்ரீசரஸ்வதி வித்யால யாவும், தேசிய வித்யா கேந்திரமும் மார்ச் 28 மாலை 6-15க்கு ஆஸ்திக சமாஜத்தில் ஆண்டு விழாவைக்கொண்டாடின. விழாவில் 'இந்தியா வின் தேசிய இலட்சியங்கள்' என்ற தலைப்பில் சுவாமி கமலாத்மானந்தர் உரையாற்றினார். நிவேதிதா அகாடமியைச் சேர்ந்த பேராசிரியர் வே. ரங்கராஜன் 'இந்தியாவின் தேசியக் கல்வி' என்பதுபற்றிப் பேசினார். ஸ்ரீசரஸ்வதி வித்யாலயா, தேசிய வித்யா கேந்திரம் ஆகிய இரண்டு கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகளுக்குப் பிறகு, மாணவ மாணவியருக்கும் ஆசிரியைகளுக்கும் சுவாமி கமலாத்மானந்தர் பரிசுகள் வழங்கினார்.

பெரம்பூரில், ஸ்ரீராமகிருஷ்ணரின் பக்தர் களால் நடத்தப்பெறும் அன்னதான சமாஜம் மார்ச் 29-ஆம் நாள் ஆண்டு விழாவைக் கொண்டாடியது. அன்று காலை 9 மணிக்கு அன்னதான சமாஜத்தைச் சேர்ந்த விவேகா னந்த ஹாலில், ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் சாதுக்களால் விசேஷ பூஜையும் ஹோமமும் நடத்தப் பெற்றன. அதைத் தொடர்ந்து சுவாமி கபீரானந்தர் சொற்பொழிவாற்றினார். அன்று இரவு 7-30 மணிக்கு 'அன்னதானத்தின் சிறப்பு' என்பது பற்றி சுவாமி கமலாத்மா னந்தர் விவேகானந்த ஹாலில் உரை நிகழ்த் தினார்.

நாட்டறம்பள்ளி ஸ்ரீராமகிருஷ்ண மடம், இந்த ஆண்டு பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் ஜயந்தி விழாவை மார்ச் 29-ஆம் நாள் பெரிய அளவில் கொண்டாடியது. பஜனை, விசேஷ பூஜை, ஊர்வலம், அன்னதானம் ஆகிய வற்றுடன் விழா விமரிசையாக நடந்தேறியது. அன்று மாலை நாட்டறம்பள்ளி மடத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு முன்னாள் சுப்ரீம் கோர்ட் நீதிபதி பி. எஸ். கைலாசம் தலைமை வகித்துத் தலைமையுரை நிகழ்த்தினார். அடுத்து திருமதி சௌந்தரம் கைலாசம் அவர்கள் 'அன்னை ஸ்ரீசாரதாதேவியார்' என்ற தலைப்பிலும், பேராசிரியர் ஆர். இராதா கிருஷ்ணன் அவர்கள் 'ஸ்ரீராமகிருஷ்ணரும் விவேகானந்தரும்' என்ற தலைப்பிலும் சொற் பொழிவாற்றினர்.



அக்பர் பெற்ற படிப்பினை

வால்மீகி

அக்பர் பாதுஷா டில்லியில் அரசாண்டபொழுது இந்தியாவில் சர்வ சமய சமரசம் நிலவியது. பாதுஷா ஒரு நல்ல முஸ்லீமாக இருந்தபொழுதிலும், இதர சமயத்தவர்களுக்கு எவ்வித இடையூறும் விளைவிக்கவில்லை. எல்லாச் சமயங்களுக்கும் அவர் பாதுகாப்பு அளித்து வந்தார். அவருடைய முக்கிய அமைச்சரான ராஜா மான்சிங், ராஜபுத்திரக் குறுநில மன்னர்; இந்து சமயப்பற்று மிக்கவர்.

ஒரு சமயம் ராஜா மான்சிங்கிடம் அக்பர் கேட்டார்:

“இறைவனுடைய விருப்பத்தை நிறைவேற்றி வைக்க எத்தனையோ தேவதைகளும் தூதுவர்களும் இருக்கும்பொழுது உங்களுடைய கடவுள் எதற்காகப் பூமியில் மனிதனாக வந்து அவதரிக்கிறார்? மக்களிடையில் தமது விருப்பத்தை நிறைவேற்ற, விண்ணுலகிலிருந்து அவரே மண்ணுலகிற்கு நேரில் வருவானேன்?” என்றார்.

அதாவது—‘இந்து சமயத்திலுள்ள பல்வேறு அவதாரங்களுக்கு அவசியம் என்ன?’ என்பதுதான் இந்தக் கேள்வியின் பொருள். இதற்குச் சரியான மறுமொழியளிக்க ராஜா மான்சிங் அக்பர் பாதுஷாவிடம் ஒரு மாத அவகாசம் கேட்டார்.

ஒரு மாதத் தவணை முடிய இன்னும் ஒரே ஒரு நாள்தான் மீதி இருந்தது. ராஜா மான்சிங் எவ்விதமான பதிலும் சொல்லவில்லை. அவரைத் துன்பத்துக்கு உட்படுத்த விரும்பாத பாதுஷாவும் அவதார சம்பந்தமான தமது கேள்வியை அமைச்சருக்கு நினைவுபடுத்தவில்லை.

அன்று இரவு பூர்ண நிலா. பாதுஷாவும் மான்சிங்கும் யமுனை நதியிலே அலங்காரப் படகில் உல்லாசமாகப் போய்வருவது என்று ஏற்பாடு. பாதுஷா திட்டமிட்டபடி இரவு எட்டு மணிக்கு யமுனை நதிக்கரைக்கு வந்துவிட்டார். ஆனால் மான்சிங்கைக் காணவில்லை. தம்மைக் காக்க வைத்தது குறித்து, பாதுஷா ஆத்திரமடைந்து கொண்டிருக்கையில், அரைமணி நேரத்திற்குப் பின் மான்சிங் தோளில் எதையோ சுமந்துகொண்டு வருவதை அவர் கண்டார்.

"உங்களுக்காக அரைமணி நேரமாகக் காத்துக்கொண்டிருக்கிறேன்" என்று வெறுப்புடன் சொன்னார் பாதுஷா.

"நான் என்ன செய்யட்டும்? தங்களோடு சேர்ந்து புறப்படலாமென்று அரண்மனைக்குப் போனேன். ஆனால் உங்கள் செல்வக் குமரன் என்னை விடவில்லை. நானும் வருவேன் என்று அடம் பிடித்தான். வேறு வழியில்லாமல் குழந்தையை நன்றாகப் போர்த்தி எடுத்துக்கொண்டு வந்தேன்" என்றார் மான்சிங்.

தம் குழந்தையும் வந்திருக்கிறது என்பதைக் கேட்டதும் பாதுஷாவின் கோபமெல்லாம் பறந்துவிட்டது. குளிர்காற்று வீசியதனால் போர்வையை எடுக்க விரும்பாத பாதுஷா, குழந்தையை மான்சிங்கே தூக்கி வர அனுமதித்தார். எல்லோரும் படகில் ஏறிக்கொண்டு உல்லாசப் பயணத்தை ஆரம்பித்தார்கள். அரைமணி நேரம் கழிந்ததும், "ஐயோ! குழந்தை துள்ளி ஆற்றில் விழுந்து விட்டதே!" என்று அலறினார் ராஜா மான்சிங். அவர் இப்படிக் கூப்பாடு போட்டதுதான் தாமதம், அடுத்த நிமிடமே அக்பர் பாதுஷா தமது குழந்தையைக் காப்பாற்ற ஆற்றில் பாய்ந்தார். கால்மணி நேரத்தில் அவர் குழந்தையுடன் படகில் திரும்ப ஏறிப் பார்த்தால், அவர் எடுத்துக்கொண்டு வந்தது உண்மையில் ஒரு குழந்தை இல்லை. தம் குழந்தையைப் போல் செய்த ஒரு மெழுகுப் பொம்மை!

"இதெல்லாம் என்ன நாடகம்?" என்று கோபத்தோடு வினவினார் பாதுஷா.

"மன்னிக்க வேண்டும், பாதுஷா. இந்தப் படகில் எத்தனையோ காவலர் இருந்தும் நீங்கள் ஏன் என் கூக்குரலைக் கேட்டதும் ஆற்றில் பாய்ந்தீர்கள்? உங்கள் உத்தரவை நிறைவேற்றப் படகில் எத்தனை ஆட்கள் இருக்கிறார்கள்? அவர்கள் ஆற்றில் குதித்துக் குழந்தையைக் காப்பாற்ற மாட்டார்களா? உங்கள் குழந்தை என்றதும் உங்களுடைய ஆசையும் பாசமும் பிறருடைய கையை எதிர்பார்க்காமல் உங்களை ஆற்றில் குதிக்கச் செய்தன. நாங்கள் வழிபடும் இறைவனும் அப்படித்தான். தனக்கு எத்தனை ஏவலாளர்களும் தூதுவர்களும் இருந்த போதிலும், தன் குழந்தைகளான மக்கள் குலம் தவறிழைக்கும்பொழுது மக்கள் குலத்திடம் கொண்ட ஆசையினாலும் பாசத்தினாலும் பிறர் கையை எதிர்பார்க்காமல் தானே உலகில் வந்து அவதரிக்கிறான். இதுதான் இந்து சமயக் கடவுளின் அவதார ரகசியம். இதை விளக்கத் தாங்கள் ஒரு மாதகாலம் அவகாசம் கொடுத்தீர்கள். தவணை முடிவதற்குள்ளாகவே பதில் சொல்லிவிட்டேன்" என்றார் ராஜா மான்சிங். அவருடைய மதிநுட்பத்தைப் பாராட்டினார் பாதுஷா.

கோபம் எழும்போது, அதன் விளைவுகளை எண்ணிப் பார். — கன்பூஷியஸ்

கர்வம் முதன்மையான பெரிய பிரபு; நரகத்தின் ஜனாதிபதி. — டிபோ

நமது குணங்களில் சில உடன்பிறந்தவை, பிற கல்வியின் பயன். இவற்றில் எவை அதிகத் தீங்கு செய்வன என்பதே கேள்வி. — கதே

அடியார்களின் நிலை

கி. வா. ஜகந்நாதன்

சிவபெருமான் திரிபுரங்களை அழித்தவன். இரும்பு, வெள்ளி, பொன் ஆகிய மூன்றினாலும் அமைந்த கோட்டைகளையுடைய மூன்று புரங்களில் வாழ்ந்து வித்யுன்மாலி, தாரகாட்சன், வாணன் என்ற மூன்று அசுரர்கள் உலகத்தை நலிந்து வந்தார்கள். பறக்கும் கோட்டைகளாகிய அவை திடீரென்று எங்கேனும் வந்து படியும். அவற்றின்கீழ் அகப்பட்டவர்களெல்லாம் நசுங்கி மடிவார்கள். இவ்வாறு மக்களை அழிப்பதில் இன்பம் கண்டார்கள், அந்த அசுரர்கள்.



அவர்கள் செய்த கொடுஞ் செயல்களைப் பொறுக்காமல் தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டுக் கொண்டார்கள். இறைவன் மேருவையே வில்லாகவும் வாசுகியையே நாணாகவும் திருமாலையே அம்பாகவும் கொண்டு, பூமியாகிய தேரில் ஏறி, நான்முகன் சாரதியாக இருந்து அதைச் செலுத்தப் புறப்பட்டான். திரிபுரங்களை அணுகியபோது அம்பாக இருந்த திருமாலுக்குச் சிறிதே அகங்காரம் தோன்றியது. 'நாம் அம்பாக இருந்து திரிபுரங்களை அழிக்கப்போகிறோம். திரிபுர சங்காரத்தில் நம்முடைய பங்கே தலைமையானது' என்ற அகந்தை அவருக்கு உண்டாயிற்று. அதை அறிந்த சிவபெருமான் அவருடைய பேதைமையை எண்ணிச் சிரிப்பது போலப் புன்னகை செய்தான். அந்தப் புன்னகையின் ஒளியே திரிபுரங்களை எரித்துவிட்டது. மற்ற யாருடைய துணையையும் வேண்டாமல் தன்னுடைய சிரிப்பினாலே இறைவன் திரிபுர சங்காரம் செய்துவிட்டான். இது வரலாறு.

தேவாரத்திலும் பிற பாடல்களிலும் திரிபுர சங்காரத்தைப் பற்றிய செய்தி வரும்போது வேறு வகையாகவும் இருப்பதுண்டு. இறைவன் தன் நெற்றிக் கண்ணை விழித்துத் திரிபுரங்களை எரித்தான் என்றும், அம்பை எய்து அழித்தான் என்றும் வரும். இவ்வாறு வேறுபட்டு இருப்பதற்கு ஒரு காரணம் சொல்வதுண்டு. ஒவ்வொரு கற்பத்திலும் திரிபுரசங்காரம் நடைபெறுகிறதாம். அந்த அந்தக் கற்பத்தில் வெவ்வேறு முறைகளை இறைவன் ஆளுகிறானாம். ஆதலால் இவற்றைக் கற்ப பேதம் என்று சொல்வது வழக்கம்.

இறைவனுடைய திருவிளையாடல்களைச் சொல்லும் பக்தர்களுக்கு அவன் திரிபுர சங்காரம் செய்தான் என்ற மையக் கருத்தே நினைவில் இருக்கிறது. எவ்வாறு அழித்தான் என்பதை நினைவு கொள்வதில்லை. எப்படியானாலும் திரிபுரங்கள் அழிந்தன என்ற கருத்தில் வேறுபாடு இருப்பதில்லை. அந்த இயல்பே வேறு வேறு முறைகளை அவர்கள் சொல்வதற்குக் காரணம் என்று கொள்வதே பொருத்தமாக இருக்கும்.

காரைக்காலம்மையார், இப்போது பார்க்கப் போகும் பாட்டில், இறைவன் திரிபுரங்களை அம்பால் எய்தான் என்று சொல்கிறார்.

'பார்ப்பதற்கு அழகாக இருந்த மூன்று அரணங்களையுடையவர்களின் வலிமையை அடக்குவதற்கு இறைவன் அந்த அரணங்களை அழித்து, அவற்றின் தலைவர்களாக இருந்த அசுரர்கள் தம் ஊக்கம் குலைந்து வருந்தும்படி செய்தான். வெவ்விய தீயைக் கக்கும் அம்பை எய்து அந்தச் செயலைச் செய்தான்' என்கிறார்.

கோல

அரணார் அவிந்து அழிய வெந்திஅம்பு எய்தான்,

அந்தப் பெருமானுடைய பாததாமரைகளைப் பற்றிக்கொண்டு வாழ்கிறார்கள் அன்பர்கள்; அவற்றை இடைவிடாமல் நினைக்கிறார்கள்.

எய்தான்
சரணுர விந்தங்கள் சார்ந்து.

சிவபெருமான், அல்லாதவர்களை ஒறுப்பதற்கு வெவ்விய தீயைக் கக்கும் அம்பை வைத்திருக்கிறுன். தன்னேச் சார்ந்து பணிபவர்களுக்குத் தண்மையான தாமரைகளேப் போன்ற திருவடிகளே உடையவனுக இருக்கிறுன். கையிலே தீ அம்பு; காலிலே தாமரை போன்ற தண்மை. இறைவன் திருவடியையே புகலாகப் புகுந்தவர்களுக்கு உடலும் உள்ளமும் உயிரும் குளிரும். மூன்று தாபங்களால் உண்டாகும் வெப்பம் அவர்களுக்கு இருப்பதில்லே.

இறைவனுடைய சரணுரவிந்தங்களேச் சார்ந்தமையால் அவர்களுக்குக் கிடைக்கிற நன்மை என்ன?

அவர்கள் காலனுக்கு அஞ்சமாட்டார்கள். அவனே வென்றுவிடுவார்கள். 'காலனேயும் வென்ருேம்' என்று செம்மாப்பார்கள்.

மக்கள் இறந்தால் அவர்களே அழைத்துச் செல்லக் காலனும் அவனுடைய தூதுவர்களும் வருவார்கள். சிவபெருமானுடைய அன்பர்களின் அருகில் வரக் காலன் அஞ்சுவான். அவர்கள் எந்தத் திருவடியைப் பற்றியிருக்கிறுர்களோ அந்தத் திருவடி அவனே உதைத்து விழச் செய்தது. அதை அவன் மறந்துவிடுவானு? பக்தர்கள் இறந்தால் அவர்களேச் சிவகணங்கள் வந்து சிவலோகத்துக்கு அழைத்துச் செல்வார்கள். காலனுடைய கொடுமை அன்பர்களுக்கு இராது. அவர்கள் காலஜயம் பண்ணியவர்கள்.

காலனேயும் வென்ருேம்.

காரைக்காலம்மையார் தம்மையும் தம்மைப் போன்ற அன்பர்களேயும் எண்ணித் தன்மைப் பன்மையால் பாடுகிறுர். இறைவன் திருவடியைப் பற்றிக்கொண்ட பெருமிதத்தால் இவ்வாறு மிடுக்குடன் சொல்வதாகவும் வைத்துக்கொள்ளலாம்.

சாமான்யமானவர்கள் இறந்தால் அவர்கள் செய்த புண்ணிய பாவங்களுக்கு ஏற்றபடி மறுமை வாழ்வு அமையும். பாவங்களுக்கு உரிய தண்டனேயை ஏற்பதற்கு நரகத்தை அடைவார்கள். இறைவனுடைய அடியார்களுக்குக் காலபயமே இல்லாதபோது நரகாநுபவம் எப்படி உண்டாகும்? ஆகவே அவர்கள் நரகம் உள்ள திசையைக்கூடப் பார்க்க மாட்டார்கள். அவற்றினின்றும் நெடுந்தூரம் விலகிச் செல்வார்கள்.

கடுநரகம் கைகழன்ருேம்.

இந்த உலகத்தில் வாழும்போதே இறைவனுடைய திருவருளநுபவ உறைப்பினுல் சீவன் முக்த நிலேயை அடைந்தவர்கள் அடியார்கள். ஆதலின் இங்குள்ளபோதே, 'எமக்குக் காலபயம் இல்லே; காலஜயந்தான் உண்டு. நரகாவஸ்தை எமக்கு இல்லே. அவை இருக்குமிடத்துக்கும் எமக்கும் நெடுந்தூரம்' என்ற உறுதி அவர்களுக்கு உண்டாகிவிடுகிறது.

வினேகள் மூன்று வகை. பல பிறவிகளில் சேமித்து ஈட்டிய புண்ணிய பாவங்களாகிய கர்மங்கள் மூட்டையாக நம் கணக்கில் இருக்கின்றன. அந்த வினேத் தொகுதிக்குச் சஞ்சிதம் என்று பெயர். சஞ்சி - மூட்டை. பல பிறவிகளில் ஈட்டிய வினேயாதலின் அவை முழுவதையும் ஒரே பிறவியில் அநுபவித்துக் கழிக்க முடியாது. ஆகையால் இறைவன் அத் தொகுதியில் ஒரு பகுதியை இந்தப் பிறவியில் அநுபவித்துத் தீர்க்கட்டும் என்று ஆணேயிட்டு அனுப்புகிறுன். அதற்குப் பிராரப்தம் என்று பெயர்; அதனேயே ஊழ்வினே என்று சொல்கிருேம்.

அடியவர்கள் பிராரப்த வினேயின் பயனுக அநுபவிக்க வேண்டியவற்றை அநுபவித்துவிட்டு இறைவனே அடைவார்கள். மற்றவர்களோ பிராரப்த வினேயை அநுபவித்துக்கொண்டே புதிய வினேகளே ஈட்டுவார்கள். அந்த வினேத் தொகுதிக்கு ஆகாம்யம் என்று பெயர்.

இறைவனுடைய அடியவர்கள் இந்தப் பிறவிக்குக் காரணமான வினேயை அநுபவித்தாலும் அவனுடைய திருவடியைப் பற்றிக்கொண்டு அன்பு செய்வதால் புதிய வினேகளே ஈட்டமாட்டார்கள். அவர்கள் இந்தப் பிறவியையே இறுதிப் பிறவியாகக் கொண்டு வாழ்வதனுல், அடுத்த பிறவிகளில் அநுபவிப்பதற்கு உரிய சஞ்சிதம் அவர்களளவில் பயனற்றுப் போகிறது. மற்றவர்களோ புதிய வினேகளேயும்

ஈட்டி அந்த மூட்டையைப் பெருக்கிக்கொள்கிறார்கள்.

ஒரு செல்வருடைய புதல்வன் வீண் செலவு செய்து பெரிய கடனாளியாகிவிடுகிறான். அவனுடைய தந்தை அவனுக்கு இரங்கி, "இனியாவது புத்தியாகப் பிழைத்துக்கொள்" என்று சொல்லி, ஒரு தொகையைக் கொடுத்து, "இதை வைத்துக் கொண்டு வியாபாரம் செய்து கடனில் ஒரு பகுதியைத் தீர்த்துவிடு" என்று சொல்லி அனுப்புகிறார். அவன் வியாபாரத்தில் ஈடுபட்டுத் தந்தை வரையறுத்த கடனை அடைத்துவிடுகிறான்; ஆனால் புதிய கடனை வாங்குகிறான். அவனுக்கு என்றாவது உய்தி உண்டாகுமோ?

அறிவாளியான பையன் ஒருவனுக்கு அவன் தந்தை இவ்வாறே செய்கிறார். அவன் தன் தந்தையின் அறிவுரைப்படியே நடந்து, தந்தை வரையறுத்த கடனைத் தீர்த்துவிட்டு, புதிய கடன் ஏதும் வாங்காமல் வியாபாரம் செய்கிறான். தந்தை அவனுடைய பழைய கடனை 'வஜா' செய்ய ஏற்பாடு செய்கிறார்.

இந்த இரண்டு உதாரணங்களும் அடியாரல்லாதவர்களுக்கும் அடியார்களுக்கும் உள்ள இயல்பை விளக்குவன.

காலனை வென்று கடுநரகம் கைகழன்ற அடியவர்கள் தம்மை நலிவதற்கு உரிய சஞ்சிதம், ஆகாம்யம் என்னும் இருவகை வினைகளும் இல்லாமல் அவற்றை அடியோடு அறுத்துவிடுவார்கள்.

மேலை இருவினையும் வேரறுத்தோம்.

காலபயம் இல்லாமலும் நரகத்தின் வாசனையே படாமலும் பிறப்புக்குக் காரணமான வினைகளால் நலிவுறாமலும் உள்ள நிலை சீவன்முக்த நிலை. இறைவனுடைய பக்தர்கள் முக்தர்களாகத் திகழ்வார்கள். காரைக்காலம்மையார் அந்த நிலையில் உள்ளவர். ஆதலால் அவர் செம்மாப்புடன் இருப்பவர்.

காலனையும் வென்றோம்,
    கடுநரகம் கைகழன்றோம்;
மேலை இருவினையும்
    வேர் அறுத்தோம்—கோல
அரணார் அவிந்துஅழிய
    வெந்நீஅம்பு எய்தான்
சரணார விந்தங்கள் சார்ந்து.

※ பார்ப்பதற்கு அழகாக இருந்த கோட்டைகளாகிய திரிபுரங்களை உடைய அசுரர்கள், தம் ஊக்கம் குலைந்து இரங்கும்படியாக, அந்தப் புரங்களை வெவ்விய தீயைக் கக்கும் ஓர் அம்பினால் எய்து அழித்த சிவபெருமானுடைய திருவடிகளைப் பற்றாகப் பற்றி, யாம் காலஜயம் பெற்றோம்; கடுமையான நரகானுபவத்தினின்றும் விலகி நிற்கிறோம்; முன்புள்ள சஞ்சித வினையையும் இப்போது சேரும் ஆகாம்ய வினையையும் வேரோடு அறுத்துவிட்டோம்.※

[காலனையும் : உம்மை உயர்வு சிறப்பு. எண்ணும்மையாக வைத்து, கடுநரகத்தையும் என்று உம்மையை வருவித்து முடிப்பதும் ஒன்று. கடுநரகம் என்பதில் உள்ள கடுமை இனத்தைச் சுட்டாமல், அதன் இயல்பைச் சொல்லியது: செஞ்ஞாயிறு என்பது போல. கைகழன்றோம் - அதன் பக்கத்தில் சாராமல் விலகி நின்றோம். மேலை என்பது இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் குறிக்கும். இறந்தகால வினையாகிய சஞ்சிதத்தையும் வருங்கால வினையாகிய ஆகாமியத்தையும் அறுத்துவிட்டோம் என்றார். வினைகளையும் வேரில் அறுத்துவிட்டோம், வேரோடு அறுத்துவிட்டோம் என்று இருவகையாகவும் கொள்ளலாம். கோலம் : பார்வைக்கு அழகாக இருந்தாலும் செயலால் கொடுமையையுடையது என்பது குறிப்பு. 'அரணார் அவிந்தழிய' என்பதற்கு, 'திரிபுராதிகள் இறந்து போக' என்று பொருள் செய்தல் பொருந்தாது. இறைவன் திரிபுரங்களை அழித்தானேயன்றி அவற்றின் தலைவர்களை அழிக்கவில்லை. அவர்களைத் திருத்தித் தன் தொண்டில் ஈடுபடச் செய்தான். ஆதலின், 'தம் ஊக்கம் கெட்டு இரங்க' என்று பொருள் கூறப்பட்டது.

அம்பில் வாயு, அக்கினி, திருமால் மூவரும் இருந்தனர் என்பது புராண வரலாறு. எரிப்பதற்குக் காரணமானது அக்கினியாதலின் அதை அடையாக்கி 'வெந்தீ அம்பு' என்றார். முப்புரங்களையும் எரிக்கும் ஆற்றலும் வெம்மையும் உடையதாதலின் 'வெந்தீ' ஆயிற்று. தீயையுடைய அம்பு. கையை நோக்கத் தீயம்பு தெரிந்தாலும் திருவடியை நோக்கத் தாமரையாக இருக்கும் என்றார். சார்தலாவது இடைவிடாது நினைத்தல்.]

இறைவனின் அடியார்களுக்கு யமபயமும் நரகாவஸ்தையும் பிறவிக்குக் காரணமான வினைகளும் இல்லாமல் ஒழியும் என்பது கருத்து.

அற்புதத் திருவந்தாதியின் 81 - ஆவது பாட்டு இது.

தொழிலும் உருவமும்

சுவாமி அமரானந்தர்

ஈன்று அளித்து அழிக்கும் செய்கைக்கு
ஏதுவாம் அயனாய் மாலாய்
ஆன்ற ஈசனுமாய்த் தானே அனந்த
மூர்த்தியுமாய் நிற்கும்
பூன்ற முத்தனுமாய் இன்பப் புணரி
ஆதவனாய் நாளும்
தோன்றிய விமல போத சொரூபத்தைப்
பணிக்கின்றேனே.

[ஆன்ற — மாட்சிமை பொருந்திய; பூன்ற — பூரண; புணரி—கடல்.]

ஆக்கல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழிலுக்கும் முகாமையாக உள்ள பிரம்மா விஷ்ணு ருத்திரனாகவும், எண்ணிலடங்காத உருவங்களாகவும், பூரணனாகவும், முக்தனாகவும், இன்பக் கடலாகவும், சுயம் பிரகாசமுடையவனாகவும், காலத்தைக் கடந்தவனாகவும், மாசற்றவனாகவும் தோன்றி வந்துள்ள அந்தப் பரசொரூபத்தைப் பணிவோமாக.

தோற்றத்துக்கு அப்பாலுள்ள ஏகநாயகனான பரம்பொருள் தோற்றத்துக்கு வரும்போது அது சிருஷ்டி ஸ்திதி சம்ஹாரம் ஆகிய முத்தொழில் நடத்துகிற பிரகிருதி ஆகிறது.

முத்தொழிலுக்கும் கர்த்தாக்களாக முறையே பிரம்மா விஷ்ணு ருத்திரன் ஆகிய மூவரையும் மறைகள் வகுத்துக் கொடுக்கின்றன. அவர்களே அயன் மால் ஈசன் எனவும் பெயர் பெறுகின்றனர். இங்கு ஈசன் என்பது சம்ஹார மூர்த்தி ருத்திரன் என்ற பொர்ருளில் கொள்ளப் பட்டிருக்கிறது.

பிரகிருதி, பரவஸ்துவின் சொரூபமாகையால், அதன்கண்ணுள்ள சகல ஜீவராசிகளும் அந்தப் பரவஸ்துவின் சொரூபங்களாகின்றன. எனவே அவன் அனந்த மூர்த்தி என்று பெயர் பெறுகிறான். 'எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய் அங்கங்கிருப்பது நீயன்றோ பராபரமே' என்பது தாயுமானவரின் தகைசான்ற வாக்கியம் ஆகும்.

அறிவுமயமாய் இறைவன் எல்லார் உள்ளத்திலும் வீற்றிருக்கிறான். அறிவு இல்லாத உயிர்களே இல்லை.

இப்படித் தோற்றத்தில் இருப்பதல்லாமல், காட்சியில் இருக்கிற நீர் ஆவியாக மாறி, காட்சிக்கு அப்பால் இருப்பது போன்று, பரம் பொருள் தோற்றத்துக்கு அப்பால் எங்கும் நிறைந்திருப்பதனால் அவன் பூரணனாக இருக்கிறான். இடையீடின்றி எங்கும் நிறைந்திருப்பது பூரணம் ஆகிறது. பிரகிருதியின் செயலில் அவன் சம்பந்தப்படாமல் சாட்சியாக இருப்பதனால் முக்தனாகிறான். முக்தி என்பது விடுபட்ட நிலையாகிறது. எச்செயலும் அவனைப் பந்தப்படுத்துவதில்லை. போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனாக இருக்கிறான்.

மெய்ப்பொருள் இன்பப் புணரியாக அதாவது ஆனந்தக் கடலாக இருக்கிறது. ஆனந்தப்படாத உயிர்கள் உலகத்தில் இல்லை. சர்வ ஜீவ ராசிகளும் ஆனந்தசொரூபிகள் என்பது ஆப்த வாக்கியம். ஆனந்தம் இல்லையேல் உலகில் உயிர்கள் வாழமுடியாது. இந்த ஆனந்தத்துக்கு எல்லாம் மூலப்பொருளான சச்சிதானந்தமாக மெய்ப்பொருள் இருக்கிறது. எனவே அது கடல் போன்று பேரானந்தமாக இருக்கிறது. உயிர்களின் ஆனந்தத்தை, 'தினைத்தனைப் பூவில் உள்ள தேனாகவும்', இறைவனின் பேரானந்தத்தை, 'நினைதொறும் காணுந்தொறும் பேசுந்தொறும் அனைத்து எலும்பும் உள்நெகும் ஆனந்தத்தேனாகவும்' ஒப்பிட்டு மணிவாசகம் இனிக்கச் செய்கிறது.

சந்திரனுடைய வெளிச்சத்துக்கு மூலம் சூரியனுடைய வெளிச்சம். இந்தச் சூரியன் பரம்பொருளாகிய பிரஞ்ஞானம் அதாவது பேரறிவிலிருந்து பிரகாசத்தைப் பெறுகிறான். யாரும் இல்லாத அறையில் அடிக்கும் சூரியவெளிச்சம் பொருள் படுத்துவார் இல்லாதாகிவிடுகிறது. பொருட்படுத்துவார் இல்லாத ஒரு பொருள் இல்லாததற்குச் சமானமாகி விடுகிறது. எனவே

ஆதவனுக்கு ஆதவனகப் பரம்பொருள் இருக்கிருன், அதாவது ஞானசூரியனுக இருக்கிருன்.

காலத்தைக் கடந்தவன் பரம்பொருள். எந்நாளும் மறைவின்றி அறிவுக்கு அறிவாகத் தோற்றத்தில் இருக்கிருன். நல்ல தூக்கத்தில் காலம் போவதுகூடத் தெரியாமல் அந்தக் காலத்தைக் கடந்த நிலையில் அந்தத் தூக்கத்தை அறிந்துகொண்டிருக்கிருன். 'நேரம் போனதே தெரியவில்லை, நன்கு தூங்கிக் கொண்டிருந்தேன்' என்பது அனைவருக்கும் அனுபவம் ஆகும்.

நிகழ்ச்சிகள் காலத்தால் துண்டிக்கப்படுவது போலப் பரம்பொருள் துண்டிக்கப்படுவதில்லை. அது யாண்டும் எந்நாளும் தன்மயமாக இருக்கிறது. ஜட அக்கினி பிரகாசமான சூரியனிடத்திலேயே காலம் இல்லை. இனி அதற்கும் மூலமான சிதக்கினியில் காலம் எங்கிருக்கும்?

மெய்ப்பொருள் பிரபஞ்சத்தின் நன்மை திமைகளாகிய கிருத்தியங்களில் கட்டுப்படாது இருப்பதனல் அவன் நிர்மலன் அதாவது விமலன் ஆகிருன். மலம் அதாவது அழுக்கு அற்றவன் என்பது இதன் பொருள். இருள்சேரும் நன்மை தீமைகளாகிய இருவினைகளும் பேரறிவைப் பற்றுவதில்லை, பற்றவும் இயலாது. அந்தப் பேரறிவு அனைத்தையும் அறிவதனல் போத சொரூபம் என்று இயம்பப்படுகிறது. புத்தியே நிறைந்தவன் புத்தன் ஆகிருன். அவன் பணிவதற்கு ஏற்றமுடையவனுகிருன்.

ஆக்கல் அருளல் அழித்தல் மூன்றும்
பூக்கும் உலகின் பொலிவா கும்மே.

ஒப்பிடுக :

அந்த ஆத்மா எங்கும் நிறைந்தவன், ஒளி பொருந்தியவன், சரீரம் இல்லாதவன், நோயற்றவன், நரம்புகளில்லாதவன், சுத்தமானவன், பாவம் அற்றவன், அனைத்தையும் அறிந்தவன், மனதுக்கு மன்னன், எல்லாவற்றையும் கடந்தவன், தானுக உண்டானவன், சிருஷ்டிக்கு அவனே காரணமாக இருக்கிருன்.

—ஈசாவாஸ்யோபநிஷதம், 8

சிருஷ்டி ஸ்திதி சம்ஹாரம் ஆகிய முத்தொழில்களில் ஈடுபட்டிருக்கும்போது அந்தப் பொருளுக்கு, சகுணப் பிரம்மம் அல்லது ஆதி சக்தி என்று பெயர். முத்தொழிலுக்கு அப்பாற்பட்டதாக அந்தப் பொருள் இருக்கும்போது அதற்குப் பரப்பிரம்மம் அல்லது நிர்க்குணப் பிரம்மம் என்று பெயர். சொற்பதம் கடந்தது அது.

—பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்

மதுபானப் பிரியருடனும், மிகுதியாக மாமிசத்தை உண்பவருடனும் தொடர்பு கொள்ளாதே.


— விவிலியம்

புலால் உண்பவர் அனைவரும் பேய்கள். அவர்களின் கையால் உணவைப் பெறுவது பெரும் பாவமாகும்.

— சீக்கியம்

இரத்தம் துணியிலே பட்டால் துணியில் கறை படிந்துவிடுகிறது. இரத்தம் குடலில் பட்டால் (புலால் உண்டால்) அது உங்கள் இதயத்தை—சிந்தனையைக் கறைப் படுத்திவிடுகிறது.

—குருநானக்



இறைவன் உங்கள்மீது அன்பைப் பொழிந்துள்ளார். எனவே எல்லா உயிர்களிடத்திலும் அன்பாக இருங்கள். சதையையும் இரத்தத்தையும் நீங்கள் பலியாகத் தருவதை இறைவன் விரும்பவில்லை. உங்களது இதயத் தூய்மையைத்தான் இறைவன் விரும்புகிருர்.

— இஸ்லாம்

பிறரிடத்தில் மகிழ்ச்சியைப் பெருக்குவதில்தான் நமது மகிழ்ச்சி தோன்றுகிறது. அன்பின் கேந்திரமாக, கனிவு மற்றும் கருணையின் மையமாக விளங்கி, இறைவன் படைத்துள்ள எந்த ஜீவனையும் சிறிதும் துன்புறுத்தாமல் வாழும் ஒருவனுக்கு இந்த மகிழ்ச்சி உண்டாகிறது.

—ஒரு சாது

ஆன்மிக உரையாடல்

சுவாமி துரியானந்தர்

ஜூலை 4

உரையாடல் அறையில் உபதேசம் கேட்க ஆர்வமிக்க பக்தர்கள் நிரம்பியிருந்தனர். ஓர் இல்லற பக்தர் உள்ளே வந்து சுவாமி துரியானந்தருக்கு நமஸ்காரம் செய்துவிட்டு அமர்ந்தார். இல்லறத்தைவிட்டுத் துறவுபூணத் தாம் விரும்புவதாக அவர் துரியானந்தரிடம் தெரிவித்தார்.

சுவாமி துரியானந்தர்—அதாவது எல்லோரையும் விட்டுவிட்டு நீங்கள் வந்துவிட்டீர்களாக்கும்! உங்களுக்கு வேண்டிய சுகபோகங்களை (அவர்கள்மூலம்) பெற்றுவிட்டபின் அவர்களை விட்டு வந்துவிட்டீர்கள்! அவர்களுக்கு ஏதும் ஜீவனோபாய வழிகள் ஏற்பாடு செய்யாமல் ஓடி வந்துவிட்டது குரூரமானது, பேடித்தனமானது என்பதை நீர் காணவில்லையா? திடுதிப்பென்று வீட்டை விடுவதற்கு ஒருத்தன் சுதந்திரம் பெற்றிருக்கிறான் என்பதா உம் எண்ணம்?

அந்த இல்லற பக்தர்—வீட்டின் எதிர்காலப் பராமரிப்பு என்பது இன்னொன்றைப் பொறுத்த இரண்டாம் பட்ச விசாரம்தான், அது அஞ்ஞானத்தில் விளைவதே.

சுவாமி துரியானந்தர்—வீட்டை விட்டு நீர் வருவது மட்டும் தன்னில்தானே உண்மையான முதல்பட்ச விஷயமாக்கும்! இது மட்டும் ஞானத்தில் விளைவதாக்கும்! அப்படித்தானே? உலக வாழ்க்கையில் இருப்பதனாலேயே ஆன்மிக வாழ்க்கைக்கு இடையூறு என்று அர்த்தமா என்ன?

நாரதர் ஒரு முறை பகவானிடம் அவரது சிறந்த பக்தன் யார் என்று கேட்டார். இன்னோரன்ன கிராமத்தில் இன்னோரன்ன ஓர் உழவன் இருப்பதாகவும், அவனைத் தமது சிறந்த பக்தன் என்றும் கூறிய பகவான், "நீயே போய்ச் சும்மா பார்த்து வாயேன்'' என்றார்.

நாரதர் அங்கே போனார். உழவன் வயலுக்குப் போய்விட்டான் எனக் கண்டார். அந்தி சாயும் போதுதான் அவன் வீடு திரும்பினான். பகவந் நாமத்தை ஒரே ஒரு முறை சொல்லிவிட்டுப் படுத்து உறங்கிவிட்டான். இதையெல்லாம் பார்த்துவிட்டு நாரதர் பகவானிடம் திரும்ப வந்தார். "இதென்ன பிரபு? நாள் முழுவதும் உலகத்தின் அற்பக் காரியங்களிலேயே ஈடுபட்டிருந்துவிட்டுத் தங்கள் நாமத்தை ஒரே ஒரு முறை மட்டும் சொல்கிற இந்த ஆசாமி எப்படிச் சிறந்த பக்தனாக இருக்க முடியும்?'' என்று கேட்டார்.

"நல்லது நாரதா! உன் கேள்விக்கு விடை விரைவில் பெறுவாய். இப்போது விளிம்புவரை எண்ணெய் நிறைந்த இந்தக் கிண்ணத்தை எடுத்துக்கொள். அது சிந்தாமல் உலகத்தைச் சுற்றிக்கொண்டு திரும்பிவா'' என்று பகவான் சொன்னார்.

நாரதர் அவ்வாறே எண்ணெய்க் கிண்ணத்துடன் மிகவும் ஜாக்கிரதையாக உலகத்தைச் சுற்றிக்கொண்டு திரும்பினார். பகவான் அவரிடம், "பேஷ் நாரதா! உலகத்தைச் சுற்றி வந்த போது என்னை எத்தனை முறை நினைத்துக் கொண்டாய்?'' என்று கேட்டார்.

"உங்களை எப்படி நினைப்பது? என் கவனம் தான் எண்ணெய் சிந்தக்கூடாது என்பதில் இருந்ததே!'' என்றார் நாரதர்.

பகவான் சொன்னார் — "சரி, எங்கே எண்ணெய் சிந்திவிடுமோ என்ற கவலையில் என்னை உன்னால் ஒரு முறைகூட நினைக்க முடியவில்லை, ஆனால் அந்த உழவன் நாள் முழுவதும் அலு

வலில் பூர்ணமாக ஈடுபட்டுள்ளபோதிலும் என்னை ஒவ்வொரு நாள் அலுவல் முடிவிலும் தவருமல் நினைக்கிருன். அவ்வாறெனில் அவன் மகாபக்தன்தானே?''

ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்வது வழக்கம்: தட்சிணேச்வரத்தில் முகர்ஜி என்று ஒருவர் வீட்டை விட்டு வந்து காளிகோயிலில் போடுகிற பிட்சையைக் கொண்டு ஜீவனம் நடத்திக் கொண்டு கோயிலிலேயே வசித்து வந்தாராம். "நீ கல்யாணமானவனுயிற்றே! உனக்குக் குழந்தைகள் உண்டா?'' என்று ஒரு நாள் ராமகிருஷ்ணர் அவரைக் கேட்டாராம். அவர் 'ஆம்' என்ருர். "அவர்களையெல்லாம் யார் பேணி வருவது?'' என்று ஸ்ரீராமகிருஷ்ணர் கேட்டாராம். அவரது மனைவி, குழந்தைகளுடன் அவளது தகப்பனுர் வீட்டில் கஷ்ட ஜீவனம் நடத்திக்கொண்டிருக்கிருள் என்ற வார்த்தை முகர்ஜியின் உதட்டிலிருந்து வந்ததோ இல்லையோ, ஸ்ரீராமகிருஷ்ணர் கூச்சல் போட ஆரம்பித்துவிட்டாராம். "அயோக்கியப் பயலே! கல்யாணம் பண்ணிக்கொண்டு பிள்ளை குட்டி பெற்றவன் நீ; இப்போது அவர்களுக்கு மாமனுர் சோறு போட்டுத் துணி கொடுத்துக் காப்பாற்ற வேண்டுமாக்கும்! இங்கேயானுல் நீ ஏழைகளுக்காக அளிக்கப்படும் உணவைச் சாப்பிட்டுக்கொண்டு காலம் கடத்துகிருய்.'' இந்த வார்த்தைகளைக் கேட்டு முகர்ஜி தம் வீட்டுக்கே திரும்பிச் சென்று இல்லறக் கடமைகளை உற்சாகத்தோடு கவனிக்கத் தொடங்கினுராம்.

சாஸ்திரங்களில் நாலு ஆச்ரமங்களை ஒன்றன் பின் ஒன்ருகச் சொல்லியிருக்கிறது. முதலில் மாணவர் பிரம்மசரிய விரதம் எடுத்துக் கொண்டு குருகுலவாசம் செய்து வித்யைகளைப் பயில வேண்டும். அப்பொழுது அவர்களது கடமைகள் குருசேவை, கடும் பிரம்மசரியம், கல்வி பயிலல் முதலியனவே. இந்தக் கடமைகளை ஆற்றி, வித்யைகளைப் பயின்று முடித்தவுடன் அவர்கள் சுதந்திரம் பெறுவர். குருவின் இல்லத்திலிருந்து கல்வி கற்று முடிந்தவுடன் அந்தப் பிரம்மசாரிகள் வீடு திரும்பி, கிருகஸ்தாச்ரமம் ஏற்கலாமா என்பதற்குத் தங்களைத் தாங்களே சோதித்துப் பார்த்துக்கொள்வர். உலகியல் எண்ணங்களின் ஆளுகையில் உள்ளவர்களே தாங்கள் என்று உணர்ந்து கொண்டவர்கள், பிரம்மசர்ய ஆச்ரமம் பூர்த்தியான ஸமாவர்த்தன ஸ்நானம் செய்து ஸ்நாதகராகி உலக வாழ்வில் புகுவார்கள்.

அவர்களுக்குத் திருமணம் செய்துகொள்வது, பிரஜோத்பத்தி செய்வது, அதிதிகளைப் பேணுவது, குடும்பத்தைப் பராமரிப்பது முதலான கடமைகள் உண்டு. இந்தக் கடமைகளை ஆற்றிய பின் அடுத்த ஆச்ரமம் தழுவ அவர்களுக்குச் சுயேச்சையான உரிமை ஏற்படுகிறது. ஒரே விஷயம் எக்காலமும் ஒருவரை ஈர்ப்பதில்லை. இவ்வாறு உலக அனுபோகங்களில் வேட்கை தேய்ந்து, அதோடு இல்லற தர்மங்களும் ஆற்றி முடிக்கப்பெறுகையில் அதன்பின் வனத்திற்குச் சென்று தவவாழ்வு மேற்கொள்ளுவது வழக்கம். இதுவே வானப்பிரஸ்தம். அப்போது அவர்கள் தமது மனைவியரையும் உடன் அழைத்துப் போகலாம். ஆனுல் தேகசம்பந்தமில்லாமல் உடன்பிறந்தவர்களைப் போல் இருவரும் வாழ வேண்டும்.

இப்படி வானப்பிரஸ்தாச்ரமத்தில் இருந்த யாஜ்ஞவல்கியருக்கும் மைத்ரேயிக்கும் நடைபெற்ற உரையாடல்பற்றி உபநிடதத்தில் வருகிறது. வானப்பிரஸ்த தவ வாழ்க்கையில் எய்திய ஞானத்தின் இயற்கை விளைவாக, யாஜ்ஞவல்கியர் அடுத்த ஆச்ரமமான சன்னியாசம் ஏற்கும் நிலையை அடைந்தார். அவர் தம்முடைய இரண்டு பத்தினிகளிடமும், "நான் துறவறம் கொள்ள வேண்டிய தருணம் வந்துவிட்டது. ஆகையால் என் உடைமைகளை நீங்கள் இருவரும் பகிர்ந்து எடுத்துக்கொள்ளுங்கள்'' என்ருர்.

உடனே மைத்ரேயி, "எனக்கு அமரத்வம் தராத இந்த உடைமைகளை வைத்துக்கொண்டு நான் என்ன செய்ய?'' என்று கேட்டாள்.

இதைக் கேட்ட யாஜ்ஞவல்கியர், "மைத்ரேயி, உன்னை நான் முன்பும் அன்பு செய்தேன், ஆனுல் இப்போதோ முன்னிலும் அதிகம் உன்னிடம் அன்பு கொண்டேன்'' என்று சொல்லி, அவளுக்கு உபதேசம் அளித்தார். அவளும் துறவு பூண்டாள்.

ஆயினும் அந்த வாழ்வுமுறையில் ஈர்ப்பு இல்லை என்பதனாலேயே மனைவியும் குழந்தைகளும் உள்ள ஒருவர் இல்லற வாழ்க்கையை விட்டுவிடலாமா என்ன? அப்போது அவர்கள் கதி என்ன? இப்படிச் செய்வது கலப்படமில்லாத அப்பட்டமான சுயநலம்தான். உலகில் இருந்துகொண்டு குடும்பத்தைக் காப்பாற்றித் தன் கடமைகளை நிறைவேற்றுவதும் நிச்சயமாக மதவாழ்வுதான். திடுமென எல்லோரையும் விட்டுவிடுவதனால் எந்த லாபமும் பெற முடியாது. “ஒரே தாவில் கூரைக்குப் போய்விட முடியாது. படிப்படியாக ஏறித்தான் போக வேண்டும். பழுக்குமுன் பறித்த காய் அழுகி வீணாகிறது. “புண் ஆறுமுன் பொருக்கைப் பிய்த்தால் அது இரத்தகாயமாகிவிடும். வெறுமனே விட்டால் புண் குணமானதும் அது வாகவே விழுந்துவிடும்” என்று ஸ்ரீராமகிருஷ்ணர் கூறுவார். எவ்வளவு சிறந்த உதாரணம் பாருங்களேன்! நல்லது, எல்லாம் மனதைப் பொறுத்ததே. கல்யாணம் செய்துகொண்டு அதற்காகப் பிற்பாடு வருத்தப்பட்டுச் சன்னியாசம் மேற்கொள்ளப் போவதாக எவரேனும் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் சொன்னால் அவர், “பொறுத்திரு; உலக வாழ்க்கையை நீயாக விடாதே; நீ மனப்பூர்வமாக இருந்தாயானால் யாவும் சரி செய்யப்பட்டுவிடும். நீ எந்த ஆச்ரமத்தில் இருந்தாலும் சாஸ்திரப்பிரகாரம் அதற்கான போக்கை விச்வாசத்தோடு பின்பற்றுவதே நீ செய்ய வேண்டியதெல்லாம்” என்பார்.

நீ இல்லறத்தை விடுவது உனக்கு நன்மை செய்யாது. உனக்குக் குழந்தைகள் உள்ளனர். அவர்களுக்கான உன் கடமைகளைத் தொடர்ந்து செய்து வா. தன்னலமே பற்றாமல் இதைச் செய்து வா. இறைவனை நாடுவதற்காக வீட்டை விடுவதாக நீ சொன்னாயானால் அது முழுப் புரளியே ஆகும். ஆத்ம சாதனைகளை எவரும் செய்ய வேண்டுமென்பது வாஸ்தவம்தான். இதுதான் அதற்குச் சமயம்.

இல்லறத்தில் மாசாக உள்ளது யாதெனில் தன்னலம்தான். முதலில் ஒருவன் தன் வருணத்துக்கும் ஆச்ரமத்துக்கும் உரிய கடமைகளைச் செய்ய வேண்டும். இதனால் அவனது சித்தம் சுத்தமடைந்தபின்பு ஆத்மஞானம் வேண்டி, முற்றிலும் தகுதி வாய்ந்த குருவை அணுக வேண்டும். தன் கடமைகளை நிறைவேற்றாமல் ஒருவன் தப்புவதற்கு வழி இல்லை. ஓர் ஆச்ரமக் கடமைகளை ஒருவன் உண்மையாகவே செய்து முடித்துவிட்டானாகில், அடுத்த ஆச்ரமத்தின் கடமைகள் உடனே இயல்பாக ஏற்பட்டுவிடும். ஆனாலும், பாலப்பருவத்திலிருந்தே உலகியலில் புகாதவர்களின் விஷயம் வேறே.

அநேகாநி ஸஹஸ்ராணி
குமார - ப்ரஹ்மசாரிணாம் |
திவம் கதாநி விப்ராணாம்
அக்ருத்வா குலஸந்ததிம் ||

—மனு ஸ்ம்ருதி, 5-159.

“தங்கள் குலத்தைச் சந்ததிமூலம் வளர்க்காதபோதிலும், பாலப்பருவத்திலிருந்தே பிரம்மசாரிகளாக இருந்த ஆயிரக்கணக்கான அந்தணர் மேலுலகு எய்தியுள்ளனர்.”

பஞ்சதந்திரம்

★ உயிரை இழக்க நேரிட்டாலும் செய்யத்தக்கதைச் செய்ய வேண்டுமே தவிர, செய்யத் தகாததை ஒருபோதும் செய்யலாகாது.


★ அறிஞர்களாய் இருப்போர் ஆபத்துக் காலத்தில் ஊக்கம் குன்றக் கூடாது. அறிவும் ஊக்கமும் இருந்தால் எத்தகைய ஆபத்தையும் எளிதில் சமாளிக்கலாம்.

★ தீயவை தீயவையே. அறிஞர்கள் அவற்றில் கவனம் செலுத்துவதில்லை. எவ்வளவுதான் தாகமெடுத்தபோதிலும் சாக்கடைநீரை யாரும் குடிப்பதில்லை.

காசி க்ஷேத்திரம்

திருமுருக கிருபானந்த வாரியார்

காசியை நினைக்க முத்தி,
காசியென் றுரைக்க முத்தி,
காசியைக் காண முத்தி,
காசியில் வசிக்க முத்தி,
காசியைச் சூழ முத்தி,
காசியைக் கேட்க முத்தி,
காசியில் வசித்தோர் தம்மைக்
கண்டுதாழ்ந் திடுதல் முத்தி.



புண்ணியத் தலங்கள் எல்லாவற்றிலும் சிறந்த முடிமணி போன்றது காசி. காசி என்ற சொல்லுக்கு 'ஒளிமயமானது' என்பது பொருள். இந்தத் தலம் மிகவும் பழமையானது; கங்கா நதிக்கு மேல்கரையில் மிகவும் அழகாகவும் விசாலமாகவும் அமைந்துள்ளது.

காசிக்குத் தெற்கே இருபது மைலிலிருந்து வடக்கே இருபது மைல் வரை கங்காநதி உத்தர வாகினியாக (தெற்கிலிருந்து வடக்கு நோக்கி) ஓடுகிறது.

ஹரித்துவாரத்தில் மிகவும் வேகமாக ஓடுகிற கங்காநதி, விச்வநாதர் எழுந்தருளிய காசியில், கணவனுக்கு அருகில் நடக்கும் பயபக்தியுள்ள கற்புடைய பெண்மணியைப் போல் மெல்லச் செல்கிறது. நதி சற்று வளைந்து போவதனால் கரையிலுள்ள 64 கட்டங்களையும் ஒருமிக்க ஒரே இடத்திலிருந்து பார்க்கலாம்.

எல்லாம் வல்ல இறைவனான சிவபெருமான் இங்கு மகிழ்ச்சியுடன் தங்கியிருப்பதனால் 'ஆனந்தவனம்' என்றும், சர்வசங்காரகாலத்தில் மாலயனாதி வானவர் யாவரும் முடிந்த இடம் ஆதலின் 'மகாமயானம்' என்றும் இந்தத் தலம் அழைக்கப்பெறுகிறது.

காசி என்பது ஆக்ஞாஸ்தானம் ஆகும். அது புருவநடு என அறிக. புருவநடுவில் அறிவின் விளக்கம் அமைந்துள்ளது. அதைக் குறிப்பிடவே அங்கே திலகம் வைக்கும் வழக்கம் ஏற்பட்டது. புருவநடுவில் நாட்டத்தை வைத்து ஏனைய உலக நாட்டங்களை மறந்துவிட வேண்டும். அதுவே இறப்பதாகும். காசியில் சென்று இறந்தவர் முத்தி பெறுவர் என்பதன் தத்துவம் அது என அறிக.

முத்தித் தலம் ஏழினுள் ஒன்று காசி; முதன்மையானதுமாகும். இங்கு இறந்த பசு பறவை மனிதர் முதலிய எல்லா உயிர்களுக்கும் இறைவன் அந்த உயிர்களின் செவியில் தாரக (ஓம்) மந்திரத்தை உபதேசித்து முத்தியருளுவான்.

இத்தலை எய்தி இறக்குநர்
யாரும் இளைப்பாற,
உத்தரியங் கொடு மாதுமை
வீசிட உமையோர்பால்
வைத்தவரும் பொருள் மேவரு
தாரக மறையோதி
முத்தி யளித்திடும் இப்பதி
யார்விட முயல்வாரே.

தாரகம் என்ற சொல்லுக்குத் 'தாண்டச் செய்வது' என்பது பொருள். பிறவிப் பெருங் கடலைத் தாண்டச் செய்வதனால் பிரணவம் தாரகம் எனப்படும். 'தாரகப் பொருளாய் நின்றான்' என வரும் கந்தபுராணத் திருவாக்காலும் அறிக. இவ்வண்ணம் இந்தத் தலம் தன்னிடம் இறந்தோர்க்கு அன்பால் முத்தியருளுவதனால் 'அவிமுக்தம்' எனப்படும்.

ஏனைய தலங்களில் பலகாலம் வசித்துப் பலப்பல அறம் செய்ததனால் வரும் பயன் காசியில் ஒரு கணம் வசித்துச் சிறிது அறம் செய்தார்க்கு உண்டாகும்.

விசுவம் — எல்லாம். எல்லாத் தலங்களிலும் எல்லா மூர்த்திகளுமாய் இங்குள்ள மூர்த்தி விளங்குவதனால் இவருக்கு 'விசுவநாதர்' என்ற சிறப்புடைய நாமம் அமைந்துள்ளது.

நதிகளில் சிறந்தது கங்கை; தலங்களில் சிறந்தது காசி; தீர்த்தங்களில் சிறந்தது மணிகர்ணிகை; மண்டபங்களில் சிறந்தது முத்தி மண்டபம்; மூர்த்திகளில் சிறந்தது விசுவலிங்கம்.

மணிகன் னிகையிற்
சிறந்தோங்கு
மலர்வாவியும்
பொன்வயங்கு கதிர்
அணிசேர்
முத்தி மண்டபத்தை
நிகர்மண் டபமும்
அலங்கு துத்திப்
பணவா ளரவின்
முடிகிடந்த
பாரில் விசும்பிற்
காசி நகர்க்
கிணையா னகரும்
எஞ்ஞான்றும்
இல்லை இல்லை இல்லையால்.

பனாரன் என்ற அரசன் இந்த நகரத்தைப் பிற்காலத்தில் புதுப்பித்தபடியால் 'பனாரஸ்' என்ற பெயரும் வழங்கலாயிற்று.

முக்தித் தலங்கள் ஏழு

காஞ்சி, மதுரா, மாயா (ஹரித்துவாரம்), அவந்தி (உஜ்ஜயினி), அயோத்தி, துவாரகை, காசி.

இந்த முத்தித் தலங்கள் ஏழினுள் காசி முதற்பீடமாகிய முகபீடம் ஆதலால் 'கௌரீமுகம்' எனப்படும்.

மணிகர்ணிகை

காசிக்குப் பகீரதனால் கங்கை வருவதற்கு முன்பு, திருமால் சக்கரத்தால் ஒரு திருக்குளத்தை உண்டாக்கி, அதன் கரையில் சிவபெருமானை வேண்டி மாதவம் புரிந்தார். விசுவேசுவரர் அவர்முன் தோன்றி அவருடைய தவத்தை மெச்சிச் சிரக்கம்பம் செய்தார். அந்தத் தலையசைவினால் அவருடைய திருச்செவியிலுள்ள குண்டலத்தின் நாகமணி நழுவி அந்தக் குளத்தில் விழுந்தது. அதனால் அந்தக் குளத்திற்கு 'மணிகர்ணிகை' என்ற பேர் ஏற்பட்டது. சக்கரத்தினால் உண்டாக்கியதனால் 'சக்கர தீர்த்தம்' எனவும் பேர் பெறும்.

பின்னர் மணிகர்ணிகையில் கங்கையும் கலந்து அதன் மகிமை உயர்ந்தது. இதில் உச்சிப் பொழுதில் முப்பத்துமுக்கோடி தேவர்களும் நீராட வருவர். அதனால் இதில் உச்சியில் நீராடுவது உத்தமம். காசியிலுள்ள எல்லாத் தீர்த்தங்களிலும் இது சிறப்புடையது.

மிருகண்டு முனிவர் இதில் முழுகி மகப்பேறு பெற்றார். மார்க்கண்டேயர் மணிகர்ணிகையில் நீராடி விசுவேச்வரருடைய திருவருளைப் பெற்று மறலியை வெல்லும் திறனை எய்தினர்.

ஞான வாவி

ஈசான உருத்திரர் இங்கே தவம் செய்து தம் சூலத்தால் ஒரு கிணற்றை உண்டாக்கி, அந்தத் தீர்த்தத்தினால் விசுவநாதரை அபிஷேகித்து வழிபட்டார். விசுவநாதர் அவருக்கு முன் தோன்றி அருள்புரிந்து, அந்தக் கிணற்றுநீரில் முழுகுவோர் பரமஞானத்தைப் பெறுவர் என்று வரமளித்தார். அதனால் அந்தக் கிணறு 'ஞான வாவி' எனப் பெயர் பெற்றது. இது விசுவநாதர் திருக்கோயிலுக்கு அருகில் உள்ளது.

விசுவநாதர்

விசுவநாதர் 12 ஜோதிர்லிங்கங்களுள் ஒன்று. மூவரும் தேவரும் முனிவரும் சித்தரும் முத்தரும் பூசித்துப் பேறுபெற்ற மிகப் புனிதமான மூர்த்தி விசுவேச்வரர். மிகப் பழமையான மூர்த்தி.

விசுவேச்வரருடைய ஆலயத்தை முஸ்லிம் மன்னன் இடித்து அவ்விடத்தில் மசூதியைப் புதுப்பித்தான். அந்த மசூதியில் பழைய கோயிலின் சின்னங்கள் இன்றும் காண்கின்றன.

அப்பொழுது விசுவலிங்கத்தை ஞானவாவியில் மறைத்து வைத்தனர். பின்பு கோயில் முக்கிய குருக்களான நாராயணபட்டர் என்பவருக்கு இறைவன் கனவில் அருளிச்செய்தவாறு அருகில் ஒரு சிறு இடத்தில் சிறிய கோயிலை அமைத்து விசுவலிங்கத்தைப் பிரதிஷ்டை புரிந்தார்கள்.

விசுவலிங்கம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அழகின் கருவூலமாக விளங்குகிறது. மேற்கு நோக்கிய மூர்த்தியை நான்கு பக்கங்களிலிருந்தும் தரிசிக்கலாம். மரகதநிறமாகப் பளபளவென்று திகழ்கிறது. சிவலிங்கத்தின் முடியில் அர்ஜுனன் அடித்த வில்லின் தழும்பு காணப்படுகிறது. கோயிலின் ஈசான மூலையில் வெள்ளித் தகடு பதித்த தொட்டியில் தங்க ஆவுடையாருக்கு இடையில் சிவலிங்கம் விளங்குகிறது. கோயில் முழுவதும் பளிங்குக் கற்களால் புதுப்பிக்கப்பெற்றிருக்கிறது. கோயிலில் பல சிவலிங்கங்கள் இருக்கின்றன. கோயிலின் மேல் தங்கச் சிகரங்கள் இரண்டு பொலிகின்றன. வழிபாட்டுக்குச் செல்லும் அடியார் அனைவரும் பூவும் நீரும் விசுவநாதரின் மீது இட்டுப் பக்திப் பரவசத்துடன் வணங்குகின்றனர்.

காலை 4 மணி முதல் இரவு 10 மணி வரையில் கோயில் திறந்திருக்கிறது. உச்சிக்கால பூஜையும் அர்த்தசாம பூஜையும் நகர தனவணிகர்களின் உபயமாக மிகவும் சிறப்பாகவும் அமைதியாகவும் நடைபெறுகின்றன. மாலை 7 மணி முதல் 8 மணி வரையில் சப்தரிஷி பூஜை என்று ஏழு அந்தணர்கள் அமர்ந்து, வேதகீதங்களைச் சொல்லி ஆராதனை செய்யும் காட்சி மாட்சிமையுடையது.

[தொடரும்]

அருள்நெறிக் கதை

சாம்பன் செய்த தவம்

நரேந்திரன்

ருத்திரமூர்த்தியின் அவதாரமாகக் கருதப் படுபவர் துர்வாசர். அவர் ஒரு சமயம் மூவுல கையும் சுற்றிக்கொண்டு வரும்போது துவார கையை அடைந்தார்.

அப்போது வசந்த காலம். பகவான் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் மகனுன சாம் பனுக்கு ஜடாமுடி தரித்த துர்வாசரைக் கண்டதும் சிரிப்புத் தாங்க முடியவில்லே. பேரெழில் படைத்த தன் உருவத்தையும் துர்வாசரின் ஒட்டி உலர்ந்து வற்றலாகிப்போன மனித எலும்புக் கூட்டையும் ஒப்பிட்டுப் பார்த்த அவனுக்குக் கர்வம் தோன்றியது. ஆகவே அவன் கர்வம்மேலோங்க, துர்வாசரைப் போன்ற ஓர் உருவத்தைச் செய்து, அவர் பார்க்கும் இடத்தில் வைத்தான். அந்த உருவத்தைத் துர்வாசர் பார்த்தார். அவருக்கு வந்ததே கோபம்! உடனே கோபத்தில் அவர் சாம்பனுக்குச் சாபம் கொடுத்தார்.

சாம்பனின் செயல் துர்வாசருக்கு அவ மானத்தை ஊட்டியது. கோபத்தால் அவரது உடல் நடுங்கியது. உடனே வாயைத் திறந்தார். "சாம்பா! நீ உன்னே மிகவும் அழகன் என்று எண்ணி மமதை கொண்டு என்னேப் பழித்தாய் அல்லவா? இந்தக் குற்றத்திற்காக நீ வெகு விரைவிலேயே குஷ்டரோகி ஆகக்கடவாய்" என்ற சாபத்தைக் கொடுத்தார்.

சாம்பன் நடுங்கிப் போனுன். காரியம் மிஞ்சி விட்டது. இனி வருந்தி என்ன பயன்?

சாம்பன் தன் குஷ்டரோகத்தைப் போக்கிக் கொள்ள எவ்வளவோ மருத்துவம் செய்து பார்த்தான்; மருந்து சாப்பிட்டுப் பார்த்தான். ஆனுல் பயன்தான் இல்லே.

முடிவில் சாம்பன் தன்னுல் இந்த நோயைக் குணப்படுத்திக் கொள்ள முடியாது என்று தீர்மானித்து, பக்தவத்சலனும், கேட்பவர் களுக்கு இன்பத்தை அளிப்பவனுமான கண்ண பிரானிடம் சென்றுன். தந்தையை வணங் கினுன். தன் நிலேயை வேதனேயோடு எடுத்துக் கூறினுன்.

துர்வாச முனிவர் கொடுத்த சாபத்தின் பலனேக் கண்ணனும் கண்டார்.

தகப்பனுரைக் கண்டு வணங்கியதும் சாம்பன், "அப்பா! துர்வாசமுனிவரின் சாபத்தால் என் உடல் முழுவதும் குஷ்டரோகத்தால் பீடிக்கப் பட்டுள்ளது. என் உடல் அழுகிக்கொண்டு வருகிறது. குரலும் அமுந்திவிட்டது. உடல் உபாதையால் உயிரே போய்க்கொண்டிருக் கிறது. எவ்வளவோ மருந்துகளேச் சாப்பிடு கிறேன். எவ்விதப் பயனுமே இல்லே. இனிமேல் என்னுல் ஒரு விநாடி நேரங்கூட உயிர் வாழ முடியாது. என்னுல் இந்த நோயின் உபாதை களேப் பொறுமையாகத் தாங்கிக்கொள்ள முடியவில்லே. தங்களிடம் விடைபெற்றுக் கொண்டு தங்களது அனுமதியுடன் உயிரை மாய்த்துக்கொள்ள விரும்புகிறேன். என் னுடைய இத்தகைய அவல நிலேயைக் கண்டு இரங்கி, தயவு செய்து எனக்குத் தற்கொலே செய்துகொள்ள அனுமதி தாருங்கள்" என்று வேண்டினுன்.

யோகிகளுக்கெல்லாம்யோகியாகிய கிருஷ்ண பரமாத்மா, மகன் சொன்னதைக் கேட்டார்; மகனது அலங்கோலத்தைக் கண்டார். ஒரு விநாடி மௌனமாக இருந்தார். பிறகு யோசித்துவிட்டு மகனே நோக்கி, "மகனே! தைரியமாக இரு. துணிவைக் கைவிடாதே. அதைரியப்படுவதனுல் நோய் அதிகமாகுமே தவிரக் குறையாது. மாருக, அது அதிகமான கஷ்டத்தையும் வேதனேயையும் அளிக்கும். நான் உனக்கு இப்போது மேலான ஒரு வழி கூறு கிறேன். அதன்படி நட. அதாவது நீ பகவான் சூரியநாராயணரைப் பக்தியோடும் சிரத்தை யோடும் வழிபடு. அவ்வாறு செய்தால் உனக்குக் கஷ்டங்களிலிருந்து விடுதலே கிடைக்கும். எந்தப் பொருள் தேவையோ அதற்குரிய தேவதையை வணங்குவதனுல் அந்தப் பொருளே உடனே ஒருவன் அடைய முடியும்" என்றுர்.

சாம்பனுக்கோ 'என்னடா தற்கொலே செய்து கொள்ள அனுமதி கேட்டால் தந்தை சூரிய

பூஜை செய்யச் சொல்கிருரே!' என்று தயக்கம் உண்டாயிற்று. மகனது ஐயத்தைப் போக்கப் பகவான் கூறினுர்—''சாஸ்திரங்களில் சொல்லப் பட்டிருப்பதாலும் அனுமானத்தாலும் ஆயிரக் கணக்கான தேவதைகள் இருப்பது நிச்சயமா கிறது. ஒவ்வொரு கடவுளேயும் பார்த்து வருவோமானுல் சூரியபகவானைவிடச் சிறந்த ஒரு தேவதை இருக்கவே முடியாது.

''உலகம் முழுவதுமே சூரியனிடமிருந்துதான் தோன்றுகிறது. முதலில் சூரியனிடமே சென்று ஐக்கியமடைகிறது. கிரகங்கள், நட்சத்திரங்கள், யோகம், கரணம், ராசி, ஆதித்தியன். வசு, ருத்திரன், வாயு, அக்கினி, அச்வினிகுமாரர்கள், இந்திரன், பிரம்மா, திசைகள், பூ: புவ: போன்ற உலகங்கள், மலைகள், நதிகள், ஓடைகள், நாகர்கள், சமுத்திரங்கள் முதலிய அனைத்தும் தோன்றக் காரணமானவர் சூரியநாராயணரே ஆவார். வேதம் புராணம் இதிகாசம் ஆகிய எல்லாவற்றிலும் சூரியநாராயணர் பரமாத்மா, அந்தராத்மா என்று வர்ணிக்கப்படுகிருர். இவருடைய குணங்களையும் மகிமைகளையும் நூறு வருடங்களானுலுங்கூட ஒருவராலும் விளக்கிவிட முடியாது. குஷ்டநோய் நீங்கி நீ உலக சுகங்களை அனுபவிக்க விரும்பினுலும் அல்லது புக்தி முக்தி போன்ற மேலான விஷயங்களை அடைய விரும்பினுலும் முறைப்படி சூரியநாராயணரை வழிபடு. அதனுல் ஆத்யாத்மிக ஆதிபௌதிக துக்கங்கள் உன்னை எப்போதும் வருத்தமாட்டா'' என்ருர்.

சாம்பன் தந்தையின் புத்திமதிக்கு ஏற்ப, சந்திரபாகா நதிக்கரையை அடைந்தான். அங்கே புகழ்மிக்க மித்திரவனம் எனப்படும் சூரிய க்ஷேத்திரத்திற்குச் சென்ருன். அங்கு அவன் உபவாச விரதம் மேற்கொண்டு, சூரிய மந்திரத்தை இடைவிடாமல் அல்லும் பகலும் ஜபிக்கத் தொடங்கினுன்.

இவ்விதம் அவன் கடுந்தவத்தில் ஈடுபடவே அவனது உடல் களையிழந்து எலும்புக்கூடு மட்டும் மிஞ்சும்படி ஆயிற்று. சாம்பன் தினமும் மிகவும் பக்திபாவத்துடன் தழுதழுத்த குரலில், ''யதேதந் மண்டலம் சுக்லம் திவ்யம் சாஜர மவ்யயம்'' என்ற சுலோகங்களைச் சொல்லி, சூரியபகவானை வழிபட்டான். இவ்வாறு தவம்



செய்ததோடு சூரியபகவானது சகஸ்ரநாமத்தை யும் அவன் சொல்லி வந்தான்.

ஒரு முறை அவனது கனவில் சூரியபகவான் தோன்றி, ''சகஸ்ரநாமத்தால் என்னைத் துதிக்க வேண்டிய அவசியம் இல்லை. நான் என் னுடைய மிகவும் ரகசியமும் மிகவும் புனிதமு மான, சுபத்தை அளிக்க வல்ல இருபத்தொரு பெயர்களை மட்டும் உனக்காகக் கூறுகிறேன். அவற்றை மட்டும் ஜபித்தாலே போதுமானது. அதனுல் சகஸ்ரநாமம் படிப்பதனுல் உண்டாகும் பயன் உண்டாகும். இந்த இருபத்தொரு பெயர்களைக் கொண்ட சுலோகம் மூவுலகிலும் பிரசித்தமானது. எவன் இந்த சுலோகத்தைக் காலையிலும் மாலையிலும் படிக்கிருனே அவன் எல்லாவிதமான பாவங்களிலிருந்தும் விடுபடு வான். வியாதியால் பீடிக்கப்பட்டிருந்தாலும் அவற்றினின்றும் விடுபட்டுச் செல்வங்களைப் பெற்று, ஆரோக்கியத்துடன் மழலைச் செல்வங் களையும் பெற்று இன்புறுவான்'' என்று கூறினுர்.

21 பெயர்கள்

ஓம் விகர்த்தனே, விவஸ்வாம்ஸ்ச
மார்த்தண்டோ பாஸ்கரோ ரவி: |
லோகப்ரகாசக: ஸ்ரீமான் லோகசக்ஷுர்
க்ரஹேச்வர : ||
லோகஸாக்ஷீ த்ரிலோகேச: கர்த்தா
ஹர்த்தா தமிஸ்ரஹா |
தபனஸ் தாபனஸ் சைவ சுசி:
ஸப்தாச்வவாஹன : ||
கபஸ்திஹஸ்தோ ப்ரஹ்மா ச
ஸர்வதேவநமஸ்க்ருத: ||

அதன் பிறகு சாம்பன் மிகுந்த சிரத்தையோடு கடுந்தவத்துடன் ஜபித்து இந்த சுலோகத்தால் துதிக்கவே சூரியபகவான் மகிழ்ந்து அவனுக்குக் காட்சியளித்தார். அவனைப்பார்த்து, ''குழந்தாய்

சாம்பா! நான் உன் தவத்தால் மிக்க மகிழ்ச்சி அடைந்திருக்கிறேன். உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்'' என்ருர்.

சாம்பனுடைய மனதோ பக்தியால் நிரம்பி யிருந்தது. அதனுல் அவன் பகவானிடம், ''பரமாத்மா! தங்களுடைய திருவடிகளில் எனக்கு இடையருத பக்தி இருக்கும்படி அருள் புரியுங்கள்'' என்று பிரார்த்தித்தான்.

சூரியபகவான், ''நிச்சயமாக உனக்கு என்மீது பிறழாத பக்தி இருக்கும். மேலும் ஏதாவது வரம் கேள்'' என்ருர். அப்போது மிக்க நாணத்துடன் சாம்பன் இரண்டாவது வரமாக, ''பகவானே! உங்களது விருப்பம் அதுவானுல் எனது இந்தக் களங்கத்தை நீக்கி ஆரோக்கிய வாழ்வளியுங்கள்'' என்ருன்.

சூரியபகவான், ''அவ்வாறே ஆகட்டும்'' என்று சொன்ன மறு விநாடியே சாம்பன் முன்பைவிடவும் அதிக ஒளியுடன் கூடிய உருவத்தைப் பெற்ருன். குரலும் அவனுக்கு நேர்த்தியாக மாறிவிட்டிருந்தது. சூரியபகவான் அவனது பக்தியால் பரவசமடைந்து அவனுக்கு அவராகவே மேலும் ஒரு வரமளித்தார். ''இந்த நகரம் உன் பெயரால் புகழ்பெற்று விளங்கும். உலகில் உன் புகழ் நிலைபெற்று நிற்கும். நான் உனக்குத் தினமும் கனவில் காட்சி தருவேன். தற்போது நீ எனக்கு இந்தச் சந்திரபாகா நதிக்கரையில் கோவில் அமைத்து அதில் என் உருவத்தைப் பிரதிஷ்டை செய்'' என்று கூறினுர்.

சாம்பன் அவ்வாறே சந்திரபாகா நதிக்கரையில் சூரியபகவானுக்குப் பெரிய கோவிலை அமைத்து அதில் முறைப்படி சூரியநாராயண மூர்த்தியை ஸ்தாபனம் செய்தான். ●

ராமாயணத்தில் சரணுகதி

அலங்காரம் தேவராஜன்

சர்வேசுவரன் ராமனுக அவதரித்தான். அவனது திருவடியின் பெருமையை முதல் முதலில் உணர்த்துகிறது அகலிகை சாப விமோசனம்.

தாசரதி விசுவாமித்திரருடன் சென்று தாடகையை ஒழிக்கிருன். விசுவாமித்திரரும் யாகத்தை முடித்துக்கொண்டு ராமலட்சுமணர்களோடு மிதிலைக்கு வருகிருர். வழியில் கௌதமரின் ஆச்ரமம். அங்கே கல்லாய்க் கிடக்கும் அகலிகையின்மீது ராமன் பாததூளி படுகிறது. கல்லும் பெண்ணுகியது. ராமன் திருவடி மகிமையால் விமோசனம் பெற்ற அகலிகை ராமனை வணங்குகிருள்.

இப்படி ராகவனின் சரணகமலங்களின் பெருமையை ராமாயணம் விளக்குகிறது. பகவான் தானே தேடி வந்து பக்தர்களைப் பரிபாலிப்பதை அகலிகையின் சாப விமோசனத்தில் காண்கிருேம்.

தேவர்கள் சரணுகதி

ராவணுதி ராட்சதர்கள் தேவர்களுக்கு எண்ணற்ற இன்னல்களைச் செய்கிருர்கள். அவர்களது கொடுமை தாங்காமல் தேவர்கள் திருமாலைச் சரணமடைகிருர்கள். பகவான் அவர்கள் முன் தோன்றி அபயம் அளிக்கிருன்.

தசரதன் பரசுராமனிடம் அபயம் கேட்டது

சீதாப்பிராட்டியைத் திருமணம் செய்து கொண்டு அயோத்திக்குத் திரும்பும் வழியில் பரசுராமன் கோதண்டராமனை எதிர்க்கிருன். ''ராமா! நீ ஒடித்தது முன்னமே இற்று முறிந்த வில். அது எனக்குத் தெரியும். அந்த வில்லை இறுத்துவிட்டோமென்று இறுமாந்திராதே. இப்போது நான் உன் பொற்ருேள் வலியைச் சோதிக்கப்போகிறேன். எங்கே? இதோ என் கையில் இருக்கும் இந்த வில்லை வளைத்து நாணேற்று, பார்க்கலாம்'' என்று சீற்றம் கொண்டு கூறுகிருன் பரசுராமன்,

அவன் வார்த்தையைக் கேட்ட தசரதன் கதி கலங்குகிறுன். இனி, தானும் இல்லே; ராமனும் இல்லே; இருவரும் அழிந்துபோவோம் என்று நடுநடுங்குகிறுன். பரசுராமனிடம் அபயம் கோரிப் பிரார்த்திக்கிறுன்.

தசரதன் அபயம் வேண்டியும் அவன் சரணுகதி பலிக்கவில்லே. ஏன்? பரசுராமன் ஓர் ஆவேசாவதாரம்தான். அவனிடம் இருந்த ஆவேசம் நீங்கிவிட்டது. ஆகவே அவனிடம் செய்த சரணுகதிக்குப் பலனில்லே. ஸ்ரீராமனே அம்சாவதாரம். அவனிடம் செய்த சரணுகதி எப்பொழுதுமே பலனளித்திருக்கிறது.



ராமனிடம் குகன் காட்டிய அன்பு

கங்கைக் கரையிலே ஆச்ரமம் ஒன்றிலே ராமபிரான் தங்கியிருக்கிறுன். இளேயவன் வெளியே காவலிருக்கிறுன். அப்பொழுது வேடர்தலேவன் குகன் ராமனேக் காண வருகிறுன். அவனது வரவை ராமனிடம் தெரிவிக்கிறுன் இலக்குமணன். ராமனும் அனுமதியளிக்கிறுன். இலக்குவன் குகனே அழைத்துச் செல்கிறுன். குகனும் அன்பு மிக்கவனுக உள்ளே சென்று ராமன் திருவடிகளே வணங்குகிறுன். இவ்வாறு அன்பு மிகுதியாலே தன் திருவடிகளில் சரணுகதி பண்ணிய வேடர்தலேவனே ராமன் தன் தம்பிகளில் ஒருவனுகவே கொள்கிறுன். அது மட்டுமா? குகப்பெருமானின் அன்பு மொழிகளேக் கேட்ட ராமன் குகனேத் தம்பியாக மட்டும் கொள்ளவில்லே, "என் உயிரை ஒத்தவன் நீ; இலக்குவன் உனக்குத் தம்பி; சீதை உன் தோழி" என்று கூறி அவனே ஆட்கொள்கிறுன்.

இந்த உறவு ராமனேடு மட்டும் நிற்கவில்லே. ராமனேத் தேடி வரும் பரதனும் தனக்குத் தமையனுகவே குகனேக் கொள்கிறுன். குகனேப் பரதன் கோசலேக்கு அறிமுகப்படுத்துகிறுன்; தனக்கு அவன் மற்ருெரு தமையன் என்றே அறிமுகப்படுத்துகிறுன். குகனது பேரன்பைக் கேட்ட கோசலேயும் அவனேத் தன் மகனுகவே ஏற்றுக்கொள்கிறுள்.

இவ்வாறு தன்னேச் சரணுகதி பண்ணிய குகனுக்குக் கைமேல் பலனளித்தான் காகுத்தன்.

பரதன் ராமனிடம் சரண் புகுந்தது

ராமபிரான் சித்திரகூடத்தில் இருக்கிறுன். அன்னேயின் செயலால் தந்தையை இழந்த பரதன் அண்ணனேத் தேடி வருகிறுன். அன்னேயர், ஆசாரியன், மந்திரிகள், பந்துமித்திரர் எல்லோரும் அவனேத் தொடர்ந்து ராமனேத் திரும்ப அயோத்திக்கு அழைத்துப் போக வருகிறுர்கள். தேடி வந்த பரதன் ராமனேக் காண்கிறுன். அவன் கண்கள் குளமாகக் காட்சியளிக்கின்றன. உள்ளத்திலே துயரம் பொங்குகிறது. உடலுருக, நா நடுங்க, மெய்ம்மறந்து அவன் இராமனது மலரடியில் வீழ்ந்து வணங்குகிறுன். காகுத்தனும் கண்ணீர் பெருகப் பரதனேக் கட்டித் தழுவுகிறுன். பரதன் தந்தை இறந்ததையும் தான் வந்ததையும் சொல்லுகிறுன். காகுத்தன் தந்தை விண்ணுலகெய்தியதைக் கேட்டுக் கண்ணும் மனமும் சுழல மண்ணில் வீழ்ந்து புலம்புகிறுன். அங்குள்ளார் தேற்ற, தந்தைக்கு நீர்க்கடனேச் செய்கிறுன்.

ராகவன் சற்றுத் தெளிவடைந்ததும் பரதன் அவனே நாட்டுக்குத் திரும்ப வேண்டுகிறுன். ராமன் பரதனுக்குப் பல நீதிகளேப் போதித்துத் தந்தையின் ஆணேயைத் தவருது இருவரும் போற்ற வேண்டும் என்கிறுன். "அண்ணு! நான் தந்தையிடம் ராஜ்யம் வேண்டுமென்று கேட்டதில்லே. தாயிடமும் கேட்கச் சொல்லவுமில்லே. என் அண்ணன் வனம் செல்ல அனுமதி செய்யவுமில்லே. அண்ணு! நீ பிதாவின் சொல்லேத் தவருது நடத்த வேண்டுமானுல்

நான் உனக்காகப் பதினுலு வருடம் வனவாசம் செய்கிறேன். எனக்குப் பதிலாக நீ ராஜ்யத்தை ஆள். இப்படிச் செய்தால் இருவரும் தந்தை சொற்படி நடந்தவராவோம்'' என்கிறுன்.

ராமன் பரதனை நோக்கி, ''உயர்குணத்து உத்தமனே! ஒருவனுக்குச் சக்தி இல்லாமற் போனுல் மற்றவன் அதைச் செய்யலாம். சக்தி மானுக இருப்பவன் செய்தல் கூடாது. ஆகை யால் பதினன்கு வருடம் வனவாசம் முடிந்ததும் உன் வேண்டுகோளுக்கு உட்படுகிறேன். என் சொற்படி நீ அரசை நடத்தி வா'' என்றுன்.

ராமன் மறுக்கவே, பரதன் அவனது பாது கையை வேண்டிப் பெறுகிறுன். அழுத கண்ணேடு அடித்தலம் இரண்டையும் முடித் தலம் இவையே என்று தன் தலைமேற்கொண்டு பரதன் திரும்பினுன். பாதுகையைக் கொடுத்த போதிலும் பரதனது சரணுகதிக்கு உடனே பலனளிக்க முடியவில்லையே என்று ராமன் மனம் புண்பட்டதாக முன்னேர் மொழிவர். இதில் உள்ள கருத்தை விரிக்கிற் பெருகும்.

காகாசுரன் ராமன் கழல்களில் வீழ்தல்

ராமனும் சீதையும் ஏகாந்தமாக இருக்கின் றனர். பிராட்டியின் மடியில் ராமன் படுத்து உறங்குகிறுன். இந்திரனது குமாரனுன ஜயந்தன் பிராட்டியின் அழகைக் கண்டு மயங்கு கிறுன். காக்கையின் உருவத்தோடு வந்து பிராட்டிக்கு ஊறு விளைவிக்கிறுன். கண்விழித்த ராகவன் அவனது அசுரச் செயலைக் காண்கிறுன். கோபக்கனல் வீச, அருகிலிருந்த புல்லை எடுத்து அதில் பிரம்மாஸ்திரத்தைப் பிரயோகித்து அவன்மேல் ஏவுகிறுன். அந்த அஸ்திரத்திற்குத் தப்ப, மூவுலகும் சென்று புகல் தேடுகிறுன் ஜயந்தன். ஒருவராலும் அவனைக் காக்க முடியவில்லை. மீண்டும் வந்து ராமன் திருவடி களிலே விழுந்து சரணம் அடைகிறுன். சரண மடைந்த அவனிடம் அருள்கொண்ட ராகவன் அவனுக்கு உயிரைக் கொடுத்து அஸ்திரம் வீணுகாமல் அவனது ஒரு கண்ணை மட்டும் அறுத்து ரக்ஷிக்கிறுன்.

சூர்ப்பணகை ராமனைப் பற்றியது

சூர்ப்பணகை அரக்கி; ராவணன் தங்கை; காட்டில் திரிந்துகொண்டிருப்பவள். வனத்தில் எத்தனையோ வழிகள் உண்டு. எந்த வழியி லாவது அவள் சென்றிருக்கலாம். அவ்வாறு போகாமல், ராமபிரான் இருக்கும் இடத்திற்கே வந்து அவனைக் காண்கிறுள். அவனது வடிவழகில் ஈடுபட்டு மதிமயங்குகிறுள்.

சூர்ப்பணகை, விபீஷணன், ராவணன் ஆகிய மூவரும் ஒரே குடியில் பிறந்தவர்கள். மூவருமே ராகவனிடத்தில் ஈடுபட்டவர்கள். சூர்ப்பணகை அயோத்தியர்கோன் அழகினுல் அனர்த்தப்பட்டாள். அண்ணலின் குணத்தில் ஆழ்ந்தான் விபீஷணன். ராமனது வீரத்தில் வீழ்ந்தான் ராவணன்.

சூர்ப்பணகையிடம் அழகாகப் பேசுகிறுன் ராமபிரான். தன் சரிதத்தைத் தன் வாயினுல் தானே அவளிடம் கூறுகிறுன். அத்தகைய பேறு பெற்றவள் சூர்ப்பணகை. ஆனுல் அங்க பங்கப்பட்டுப் போனுள். இதற்கு என்ன காரணம்? எந்தப் பிராட்டியை முன்னிட்டு அவனை அடைய வேண்டுமோ அந்தப் பிராட்டி யையே விழுங்கிவிட முயன்றுள். முறைதவறி முதல்வனை அடைய முயன்றதன் விளைவு இது.

அனுமனை முன்னிட்டுக்கொண்டு சுக்கிரீவன் ராமனை அடைந்தான். அதன் பலன் அரச பதவியே கிடைத்தது. இதனைப் புருஷகாரம் என்பர் வைணவர்.

[அடுத்த இதழில் முடியும்]

உங்கள் வாயில் புலால் நுழையாதிருப்பதாக. —இயேசுபிரான்

எந்த வகையிலும் புலால் உண்பது பெரிய தவறு. புலால் உண்ணுமை மிகவும் போற்றத் தக்கது. —யம ஸ்மிருதி

இறைச்சி உண்ணும் செயல் மிக மிகக் கொடுமையானது. மனிதன் தாவர உணவுக்கு மாறுகிறுன் என்பது அறிவின் வளர்ச்சிக்கு முதற்படி ஆகும். —டால்ஸ்டாய்



இந்தியா குடிசைகளில் வாழ்கிறது

சுவாமி விவேகானந்தர்

நமது மக்கள் படிப்பு வாசனையறியாதவர்கள் என்றும், கல்வியிலே கருத்தில்லாதவர்கள் என்றும், செய்திகளை அறிந்துகொள்வதில் ஆர்வம் இல்லாதவர்கள் என்றும் நான் சொல்லக் கேட்டிருக்கிறேன். நானும் முட்டாள்தனமாக ஒரு காலத்தில் அதே கருத்தைக் கொண்டிருந்தேன். ஆனால் நான் இப்போது பார்ப்பது என்ன? நுனிப்புல் மேய்கிறவர்களும், அவசரக் குடுக்கைகளும், உலகத்தைச் சுற்றி வருபவர்களும் எழுதுகிற புத்தகங்களை எவ்வளவுதான் படித்தாலும், அவை எல்லாவற்றையும்விட மிகச்சிறந்த ஆசான் சொந்த அனுபவமே ஆகும். அனுபவம் என்ற ஆசான் போதிக்கும் கல்விக்கு ஈடு இணையில்லை. எனவே அனுபவம் என்ற ஆசான் எனக்கு அறிவுறுத்தியது என்ன? நமது நாட்டுப் பாமர மக்கள் அறிவிலிகள் அல்லர், மற்ற எல்லா நாட்டு மக்களையும் போல நம் நாட்டு மக்களும் விஷயங்களைத் தெரிந்து கொள்ளுவதில் ஆர்வம் கொண்டவர்களாகவே இருக்கிறார்கள் என்பதுதான்.

சமய சாஸ்திரங்களைப் பிராம்மணர்கள் தங்களுக்கே உரிய தனி உரிமையாக வைத்துக் கொண்டார்கள். அந்தச் சாஸ்திரங்களை யார் படிக்கலாம், யார் படிக்கக்கூடாது என்பன போன்ற விதியையும் விலக்குகளையுங்கூடப் பிராம்மணர்கள் தங்கள் கையிலேயே வைத்துக் கொண்டார்கள். இந்தியாவிலுள்ள மற்ற ஜாதி மக்களைத் தாழ்ந்தவர்கள் என்றும் (கிழான வர்கள் என்றும்) தீயவர்கள் என்றும் மீண்டும் மீண்டும் பல முறை சொல்லி, அந்த மக்கள் தாங்கள் உண்மையில் அத்தகையவர்களே என்று நம்பும்படி பிராம்மணர்கள் செய்து விட்டனர். ஒரு மனிதனைப் பார்த்து, 'நீ தாழ்ந்தவன்; இழிவானவன்' என்று நீ அவனைப் பார்க்கும்போதெல்லாம் மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டே வருவாயேயானால், நாளடைவில் அந்த மனிதன் அதை நம்பி உண்மையில் தான் கீழானவனே என்று நினைத்துக் கொள்வது இயல்பு. இதுதான் மனோவசியம் என்று சொல்லப்படுகிறது.

ஜாதி சம்பந்தமான விவாதங்களில் என்னைப் பொறுத்தமட்டில் எந்தக் கட்சியினிடமும் எனக்குப் பாரபட்சம் என்பது கிடையாது. ஏனென்றால், ஜாதி என்பது ஒரு சமுதாய விதிதான், குண கர்ம பேதத்தையொட்டிய ஓர் அமைப்புத்தான் அது என்பதை நான் நன்றாக அறிந்திருக்கிறேன்.

வடமொழியில் ஜாதி என்ற சொல் இனம் என்பதைக் குறிக்கும். ஆதிகாலத்தில் ஜாதி என்பது தனி மனிதனின் சுதந்திரத்தை வெளிப்படுத்துவது என்ற கருத்தில் வழங்கப்பட்டு வந்தது. அவன் தனது இயல்பையும் பிரகிருதியையும் குறிக்கும் சொல்லாக ஜாதி என்ற சொல் வழக்கத்தில் இருந்தது. இந்த நிலை பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக அப்படியேதான் இருந்து வந்தது.

சாத்துவிகம், ராஜசம், தாமசம் என்ற குணம் மூன்றும் ஒவ்வொரு மனிதனிடமும் அதிக அளவிலோ குறைந்த அளவிலோ அமைந்திருக்கின்றன. அதுபோலவே பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய, நான்காம் வருணத் தன்மையாகி நான்கும் ஒவ்வொரு மனிதனிடமும் அதிக அளவிலோ குறைந்த அளவிலோ இருக்கின்றன. ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொரு குணம் தலைதூக்கி மேலெழுந்து தோன்றும். உதாரணமாக, ஒரு மனிதன் சம்பளத்திற்கென்று மற்றொருவரிடம் வேலைசெய்யும்போது நான்காம் வருணத் தன்மையில் இருக்கிறான்; அதே மனிதன் பொருள் கருதிச் சொந்த முறையில் வியாபாரத்தில் முயற்சி செய்யும்போது வைசியன் ஆகிறான்; தீயவர்களைத் தண்டிக்கச் சண்டை செய்யும்போது அவனே தன்னிடமுள்ள க்ஷத்திரியத் தன்மையை வெளிப்படுத்துகிறான்; அதே மனிதன், கடவுளைத் தியானிப்பதிலும் அவரைக் குறித்து உரையாடுவதிலும் காலத்தைக் கழிக்கும்போது பிராம்மணன் ஆகிறான். இயல்பாகவே ஒருவன் ஒரு சாதியிலிருந்து தன்னை மற்றொரு சாதிக்கு மாற்றிக்கொள்ள முடியும். அப்படி இல்லாவிட்டால், விசுவாமித்திரர் பிராம்மணரானதும் பரசுராமர் க்ஷத்திரியரானதும் எப்படி?

ஒரு பிராம்மணனுடைய மகன் தவறாமல் பிராம்மணன் ஆவானா என்று கேட்டால், அவன் பிராம்மணன் ஆவதும் சாத்தியம், ஆகாமல் போவதும் சாத்தியம்.

கல்விக்கும் பண்பாட்டிற்கும் ஏற்ப, மேலும் மேலும் நாகரிகத்தின் ஏணியில் ஏறுவதற்கு வர்ணப் பாகுபாடு இந்தியாவில் படிக்கட்டுகள் போலிருக்கின்றன. ஐரோப்பாவிலோ வலிமை வாய்ந்தவனுக்குத்தான் எங்கும் வெற்றி; பலவீனன் என்றால் அவனுக்கு அங்கு எல்லா இடத்திலும் மரணம்தான். ஆனால் நமது பாரததேசத்திலோ நாட்டின் ஒவ்வொரு சமூக விதியும் எளியோரைப் பாதுகாப்பதற்காகவே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மனித சமுதாயம் இயல்பாகவே பல பிரிவுகளாகப் பிரிந்திருக்கிறது. ஆனால் அவற்றில் ஏதாவது ஒரு பிரிவினர் அல்லது சாதியினருக்குத் தனியுரிமை இருக்குமேயானால் அந்தத் தனியுரிமை தொலைய வேண்டும். சமுதாயம் இயல்பாகவே பல பிரிவுகளைக் கொண்டிருக்கிறது. சமூகத்தில் நான் ஒரு தொழில் செய்யலாம், நீங்கள் வேறொரு தொழில் செய்யலாம். நீங்கள் நாட்டை ஆளலாம்; நான் செருப்புத் தைக்கலாம். ஆனால் அது காரணமாக நீங்கள் என்னைவிடவும் உயர்ந்தவர் என்று சொல்ல முடியாது. என்னால் நாட்டை ஆள முடியாமலிருக்கலாம், ஆனால் உங்களால் செருப்புத் தைக்க முடியுமா? நான் செருப்புத் தைக்கலாம், நீங்கள் வேதம் படிக்கலாம்; ஆனால் அது காரணமாக என் தலைமீது ஏறி மிதிக்க உங்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? ஒருவன் கொலை செய்தால் அவனைப் புகழ்வதாம்! வேறு ஒருவன் ஒரு பழத்தைத் திருடினாலும் அவனைத் தூக்கிலிட வேண்டுமாம்! ஜாதிதுவேஷத்தை அடிப்படையாகக் கொண்ட இத்தகைய அக்கிரமங்கள் ஒழிந்து போக வேண்டும்.

மீன் பிடிப்பவனுக்கு வேதாந்தம் கற்பித்தால், அவன் 'நீ எந்த அளவுக்கு நல்ல மனிதனோ நானும் அதே அளவுக்கு நல்ல மனிதன்தான். நான் மீன் பிடிப்பவனாக இருக்கலாம், நீ தத்துவம் படித்த மேதையாக இருக்கலாம். ஆனால் உன் உள்ளத்தில் இருக்கும் அதே கடவுள் என் உள்ளத்திலும் இருக்கிறார்' என்று சொல்வான். எவருக்கும் தனி உரிமை இல்லை, எல்லா மக்களும் வாழ்க்கையில் முன்னேற ஒரே விதமான வாய்ப்பு—இப்படிப்பட்ட சமுதாயம்தான் நமக்கு வேண்டும். ஒவ்வொருவர் உள்ளத்திலும் தெய்விகத்தன்மை குடிகொண்டிருக்கிறது என்பதை அவர்களுக்குப் போதியுங்கள். அதற்கு மேல் அவரவர் தங்கள் முன்னேற்றத்திற்குத் தேவையான வழிவகைகளைத் தேடிக்கொள்வார்கள்.

புராதன கால இந்தியாவில் தோன்றிய இரண்டு மாபெரும் மனிதர்களான கிருஷ்ணரும் புத்தரும் க்ஷத்திரியர்களே என்பது குறிப்பிடத்தக்க உண்மையாகும். இதைக்காட்டிலும் குறிப்பிடத்தக்கது என்னவென்றால், இந்த இரண்டு தெய்விக மனிதர்களும், உயர்சாதியினர், கீழ்ச்சாதியினர், ஆண் பெண் என்ற வேற்றுமைகளைப் பாராட்டாமல் ஒவ்வொருவருக்கும் ஆத்மஞானத்தின் வாயிற்கதவுகளைத் திறந்துவிட்டார்கள் என்பதுதான்.

இந்தியாவின் சாதிமுறை ஏற்பாடுகள் எப்போதுமே காலத்தின் போக்கை அனுசரித்து வளைந்து தரக்கூடியனவாகவே இருந்திருக்கின்றன. உயர்ந்த பண்பாட்டின் அடித்தளத்திலுள்ள இனங்கள் மேலோங்கி முன்னேற்றம் அடைய முடியாத அளவுக்கும் அந்தச் சாதிமுறை சில சமயங்களில் வளைவதும் உண்டு.

செல்வம் காட்டிய வழியிலோ, அல்லது கத்தி காட்டிய வழியிலோ இந்தியா செல்லாமல், அறிவு காட்டிய வழியிலே ஆத்மஞானத்தால் தூய்மை செய்யப்பட்டு, கட்டுதிட்டத்திற்கு அடங்கி நடக்கும் ஆன்மிக வழியில்—கொள்கை அளவில் இந்தியா முழுவதும் சாதிமுறை இயங்கி வந்தது.

இந்தியாவைத் தவிர்த்து மற்ற நாடுகளுள் ஒவ்வொன்றிலும், க்ஷத்திரியர்களுக்கு அதாவது கத்தியோடு திகழும் வீரர்களுக்குத்தான் உயர்ந்த மரியாதை உண்டு. இந்தியாவிலோ மிகவும் உயர்ந்த மரியாதை அமைதி ததும்பும் மனிதனுக்கு, பிராம்மணனுக்கு, கடவுள்நிலை எய்திய மனிதனுக்கு உரியதாக இருக்கிறது.

மற்ற நாடுகளுள் ஒவ்வொன்றிலும் சாதிமுறை என்பது தனி மனிதன் அல்லது தனித்த ஒரு பெண்ணின் நலனை மட்டும் கருத்தில் கொண்டதாக அமைந்துள்ளது. மற்ற நாடுகளில் தனியொரு மனிதன் தான் பிறந்த சமூக அஸ்தஸ்தை விட்டு, தான் விரும்பும் எந்த மேல்வகுப்பையும் தாவி அடைவதற்குச் செல்வமோ அதிகாரமோ அறிவோ அல்லது அழகோ பெற்றிருந்தால் போதுமானது.

இந்தியாவிலும், ஒருவன் தன் தாழ்ந்த சாதியிலிருந்து அதைவிடவும் உயர்ந்த சாதிக்கு அல்லது எல்லாவற்றிலும் மிகமிக உயர்ந்து விளங்கும் சாதிக்கு உயரும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால் பிறர்நலம் பிறந்த இந்த நாட்டிலே, தன்னைப் போலவே தன் சாதியில் உள்ளவர்கள் அனைவரையும் உயர்த்தி முன்னேற்றம் அடையும்படி ஒவ்வொருவனும் செய்தாக வேண்டும் என்ற கட்டுப்பாடு இருக்கிறது.



வினா—விடை வடிவத்தில் ஸ்ரீ ஆதிசங்கரர் இயற்றியுள்ள 'ப்ரச்நோத்தர ரத்னமாலிகா' இங்கே இடம் பெறுகிறது.

கேள்வி : பகவானே, ஏற்றுக்கொள்ளத் தக்கது எது ?
பதில் : குருவின் வார்த்தை.
கேள்வி : தள்ளத் தக்கது எது ?
பதில் : செய்யத் தகாதது.
கேள்வி : யார் குரு ?
பதில் : உண்மையை அறிந்தவராகவும், எப்பொழுதும் சீடர்களின் நன்மைக்காக முயலுபவராகவும் இருப்பவர்.
கேள்வி : வித்வான்களுக்குச் சீக்கிரம் செய்யத் தக்கது எது ?
பதில் : சம்சாரம் தொடர்ந்து வருவதை அறுப்பது.
கேள்வி : மோட்சம் என்னும் மரத்திற்கு விதை எது ?
பதில் : சாதனையால் ஏற்படும் தத்துவ ஞானம்.
கேள்வி : மிகவும் இதமானது எது ?
பதில் : தர்மம்.
கேள்வி : சுத்தமானவன் யார் ?
பதில் : எவனுடைய மனம் சுத்தமாக இருக்கிறதோ அவன்.
கேள்வி : பண்டிதர் யார் ?
பதில் : பகுத்தறிவுள்ளவன்.
கேள்வி : விஷம் எது ?
பதில் : பெரியோர்களிடம் அவமரியாதை.
கேள்வி : மனிதர்களில் விரும்பத்தக்கது எது?
பதில் : தனக்கும் பிறருக்கும் நன்மைக்காக முயலுதல்.
கேள்வி : மதிமயக்கத்தை உண்டுபண்ணுவது எது?
பதில் : அபிமானம் (பற்று).
கேள்வி : திருடர்கள் யார் ?
பதில் : விஷயங்கள் (உலக ஆசைகள்).
கேள்வி : பிறப்பைக் கொடுக்கும் கொடி எது?
பதில் : ஆசை.
கேள்வி : எதிரி யாது?
பதில் : முயற்சியில்லாமை.
கேள்வி : எதிலிருந்து பயம் ?
பதில் : சாவிலிருந்து.
கேள்வி : பார்வை இல்லாமையைவிடத் தீயது எது ?
பதில் : பேராசை கொள்வது.
கேள்வி : சூரன் யார் ?
பதில் : பெண்களின் பார்வையாகிற அம்புகளால் அடிபடாதவன்.
கேள்வி : எந்த அமிருதம் ருசியுள்ளது ?
பதில் : நல்லோரின் உபதேசம்.
கேள்வி : பெருந்தன்மைக்கு மூலகாரணம் எது?
பதில் : வேண்டாமல் இருப்பது.
கேள்வி : எவன் திறமைசாலி ?
பதில் : பெண்களின் நடத்தையால் பேதலிக்கப்படாதவன்.
கேள்வி : துன்பம் எது ?
பதில் : சந்தோஷமில்லாமை.
கேள்வி : சிறுமைத்தன்மை எது ?
பதில் : தாழ்ந்தோரிடம் யாசிப்பது.
கேள்வி : எது வாழ்க்கை ?
பதில் : குற்றமில்லாமை.
கேள்வி : ஜடத்தன்மை எது ?
பதில் : படிப்பதில் அப்பியாசம் செய்யாமை.
கேள்வி : எவன் விழித்துக்கொண்டிருக்கிறுன்?
பதில் : விவேகமுள்ளவன்.
கேள்வி : பிராணிக்கு எது துக்கம் ?
பதில் : மூடத்தன்மை.
கேள்வி : தாமரையிலைத் தண்ணீர் போல் சஞ்சலமானது எது ?

பதில் : வாலிபப் பருவமும் பணமும் ஆயுளும்.
கேள்வி : சந்திரனது கிரணத்திற்குச் சமமான வர் யார் ?
பதில் : நல்ல மானிடர்கள்.
கேள்வி : நரகம் எது ?
பதில் : பிறருக்குக் கட்டுப்பட்டிருப்பது.
கேள்வி : சௌக்கியம் எது ?
பதில் : எல்லாப் பற்றுதலையும் ஒழித்து விடுவது.
கேள்வி : பிராணிகளுக்கு எது பிரியம்?
பதில் : பிராணன்.
கேள்வி : துன்பத்தைப் பயனாக உடையது எது ?
பதில் : அகங்காரம்.
கேள்வி : சுகத்தைக் கொடுக்கக் கூடியது எது?
பதில் : சாதுக்களின் நட்பு.
கேள்வி : எல்லாத் துன்பங்களையும் போக்கு வதில் எவன் சமர்த்தன் ?
பதில் : எல்லா விதத்திலும் தியாகம் செய் கிறவன்.
கேள்வி : எது மரணம் ?
பதில் : முட்டாள்தனம்.
கேள்வி : எது விலைமதிக்க முடியாதது ?
பதில் : தக்க சமயத்தில் உதவியது.
கேள்வி : சாவுவரை துன்புறுத்துவது எது ?
பதில் : ரகசியமாகச் செய்த பாவம்.
கேள்வி : முயற்சி செய்யத்தக்கது எது ?
பதில் : கல்வி கற்பது, நல்ல மருந்துகளைச் சேமிப்பது, அவற்றைப் பிறருக்குக் கொடுப்பது.
கேள்வி : அலட்சியம் செய்யத் தக்கது எதில் ?
பதில் : துஷ்டன், பிறர் மனைவி, பிறர் பொருள்.
கேள்வி : இரவுபகலாகச் சிந்திக்கத்தக்கது எது?
பதில் : சம்சாரத்தின் சாரமற்ற தன்மை.
கேள்வி : மிகவும் பிரியமாகச் செய்யத் தக்கது எது ?
பதில் : ஏழைகளிடம் இரக்கம், சாதுக்க ளிடம் நட்பு.
கேள்வி : யார் சாது ?
பதில் : நல்ல நடத்தையுள்ளவன்.
கேள்வி : யார் அதமன் ?
பதில் : கெட்ட நடத்தையுள்ளவன்.
கேள்வி : எவனால் இந்த உலகம் ஜயிக்கப் பட்டது ?
பதில் : உண்மையும் பொறுமையுமுள்ள மனிதனால்.
கேள்வி : எவனுக்குத் தேவர்கள் நமஸ்காரம் செய்கிறார்கள் ?
பதில் : இரக்கத்தை முக்கியமாகக் கொண்ட வனுக்கு.
கேள்வி : நல்ல புத்தியுள்ளவனுக்கு எதி லிருந்து பயம் ஏற்படும் ?
பதில் : சம்சாரம் என்னும் கட்டிலிருந்து.
கேள்வி : பிராணிகளின் கூட்டம் யாருக்குக் கட்டுப்பட்டுள்ளது ?
பதில் : உண்மையான பிரிய வார்த்தை பேசுகிற வணக்கம் உள்ளவனுக்கு.
கேள்வி : எங்கு நிலைபெற்றிருக்க வேண்டும்?
பதில் : நியாயமான வழியில்.
கேள்வி : குருடன் எவன் ?
பதில் : செய்யத் தகாத காரியத்தில் ஈடு பட்டவன்.
கேள்வி : எவன் செவிடன் ?
பதில் : நன்மை தரும் வார்த்தைகளைக் கேளாதவன்.
கேள்வி : எவன் ஊமை ?
பதில் : தக்க சமயத்தில் பிரியமான வார்த் தைகளைப் பேசத் தெரியாதவன்.
கேள்வி : வருந்தத்தக்கது எது?
பதில் : பணம் இருக்கும்போது கஞ்சத் தனம்.
கேள்வி : சிறப்புள்ளது எது ?
பதில் : கொடுக்கும் சுபாவம்.
கேள்வி : அறிவாளிகளால் கொண்டாடத் தக்கவன் எவன் ?
பதில் : இயற்கையாகவே எப்பொழுதும் வினயமுள்ளவன்.
கேள்வி : வம்சமாகிற தாமரையை மலர வைக்கும் சூரியன் யார் ?
பதில் : நற்குணங்களால் பெருமையுற்ற போதிலும் வணக்கமுள்ளவன்.
கேள்வி : இந்த உலகம் எவனுக்கு அதீன மாக உள்ளது ?
பதில் : பிரியமாயும் இதமாயும் வார்த்தை பேசி, தர்மத்தில் ஈடுபட்டவனுக்கு.
கேள்வி : அறிவாளிகளின் மனதைக் கவருவது எது ?
பதில் : நல்ல கவிதையும், ஞானம் என்ற பெண்ணும்.

கேள்வி : ஆபத்து யாரைத் தொடாது ?
பதில் : பெரியோர் வார்த்தைப்படி நடக்கும் அடக்கம் உள்ளவனை.
கேள்வி : லக்ஷ்மி யாரிடம் ஆசைப்படுகிருள்?
பதில் : சோம்பல் இல்லாத மனமுள்ள நியாயமான நடத்தையுள்ளவனிடம்.
கேள்வி : லக்ஷ்மி திடீரென்று எவனை விட்டு விடுகிருள் ?
பதில் : அறவோர், ஆசார்யர், தேவதை இவர்களைப் பழிப்பவனையும், சோம்பலுள்ளவனையும்.
கேள்வி : எங்கே வாசம் செய்ய வேண்டும் ?
பதில் : நல்ல ஜனங்களின் அருகில் அல்லது காசி க்ஷேத்திரத்தில்.
கேள்வி : எந்தத் தேசம் விலக்கத்தக்கது ?
பதில் : கோள் சொல்பவர்களுடன் கூடியதும் லோபியான அரசனையுடையதுமான நாடு விலக்கத்தக்கது.
கேள்வி : இவ்வுலகில் எவன் வருந்தத்தக்கவன்?
பதில் : பணம் இருந்தும் கொடுக்காதவன்.
கேள்வி : ராமனைவிட வீரன் யார் ?
பதில் : காமபாணத்தால் அடிபட்டுச் சலிக்காதவன்.
கேள்வி : இரவும் பகலும் நினைக்கத் தக்கது எது ?
பதில் : பகவானின் திருவடி; சம்சாரம் அல்ல.
கேள்வி : கண் இருந்தும் குருடர் யார் ?
பதில் : நாஸ்திகர்.
கேள்வி : பிரசித்தமான நொண்டி யார் ?
பதில் : முதுமையில் புண்ணிய தீர்த்தம் செல்கிறவன்.
கேள்வி : முக்கியமான தீர்த்தம் எது ?
பதில் : எது மனதின் அழுக்கைப் போக்குகிறதோ அது.
கேள்வி : நல்ல புத்தி உள்ளவனுல் சொல்லத்தகாதது எது ?
பதில் : பிறரின் குற்றமும் பொய்யும்.
கேள்வி : மனிதர்களால் சம்பாதிக்கத் தக்கது எது ?
பதில் : கல்வி, பொருள், பலம், புகழ், புண்ணியம்.
கேள்வி : எல்லா நல்ல குணங்களையும் நீக்கி விடுவது எது ?
பதில் : பேராசை.
கேள்வி : எதிரி யார் ?
பதில் : காமம்.
கேள்வி : எந்தச் சபை விலக்கத்தக்கது ?
பதில் : வயதான மந்திரி இல்லாத சபை.
கேள்வி : பிராணனைவிடச் சிறந்தது எது ?
பதில் : குலதர்மம், சாதுக்களின் சேர்க்கை.
கேள்வி : காப்பாற்றத் தக்கது எது ?
பதில் : புகழ், கற்பு, சுயபுத்தி.
கேள்வி : அழியாத ஆலமரம் எது ?
பதில் : சாஸ்திரப்படி நல்ல பாத்திரத்தில் கொடுக்கப்பட்ட தானம்.
கேள்வி : எல்லோருக்கும் எது சாஸ்திரம்?
பதில் : யுக்தி.
கேள்வி : தாயார் யார்?
பதில் : பசு.
கேள்வி : எது பலம் ?
பதில் : தைரியம்.
கேள்வி : யார் யமன்?
பதில் : கவனமில்லாமலிருப்பது.
கேள்வி : எங்கு விஷம் உள்ளது ?
பதில் : துஷ்டர்களிடம்.
கேள்வி : மனிதர்களுக்கு எது தீட்டு ?
பதில் : கடன்.
கேள்வி : பயமில்லாதது எது?
பதில் : பற்றின்மை.
கேள்வி : எல்லோருக்கும் பயம் எது?
பதில் : பணம்தான்.
கேள்வி : பாதகம் எது?
பதில் : ஹிம்சை.
கேள்வி : பகவானுக்குப் பிரியமானவன் எவன்?
பதில் : தானும் பயப்படாமல், பிறரையும் பயப்படச் செய்யாதவன்.
கேள்வி : எதிலிருந்து சித்தி ஏற்படும்?
பதில் : தவத்திலிருந்து.
கேள்வி : எதனுல் புத்தி ஏற்படுகிறது?
பதில் : பெரியோர்களைச் சேவிப்பதனுல்.
கேள்வி : பெரியோர் யார்?
பதில் : தருமத்தின் சொருபத்தை அறிந்தவர்கள்.
கேள்வி : புகழ் அடைந்தவனுக்கு மரணத்தை விட எது கொடியது?
பதில் : அபகீர்த்தி.

கேள்வி : எல்லாச் சுகங்களுக்கும் காரணம் எது?
பதில் : புண்ணியம்.
கேள்வி : எதிலிருந்து துக்கம் ஏற்படுகிறது?
பதில் : பாவத்திலிருந்து.
கேள்வி : எவன் உயர்நிலையடைகிறான்?
பதில் : வணக்கமுள்ளவன்.
கேள்வி : எவன் தாழ்வு அடைவான்?
பதில் : கர்வம் உள்ளவன்.
கேள்வி : நம்பத் தகாதவன் எவன்?
பதில் : அடிக்கடி பொய் சொல்லுகிறவன்.
கேள்வி : சிஷ்யன் யார்?
பதில் : வேதத்தைப் பிரமாணமாகக் கொண்டவன்.
கேள்வி : எவன் கெட்டுப்போனவன்?
பதில் : தர்ம காரியத்திலிருந்து நழுவியவன்.
கேள்வி : சரீரம் உள்ளவர்களுக்கு எது பாக்கியம்?
பதில் : பிணியில்லாமை.
கேள்வி : செய்ய முடியாதது எது?
பதில் : எப்பொழுதும் மனதை அடக்குவது.
கேள்வி : உலகைப் போஷிக்கிறவன் யார்?
பதில் : சூரியன்.
கேள்வி : எவன் சூரன்?
பதில் : பயந்தவர்களைக் காப்பாற்றுகிறவன்.
கேள்வி : இன்ன விதம் என்று சொல்ல முடியாதது எது?
பதில் : மாயை.
கேள்வி : அன்னத்தைப் பெறத் தகுந்தவன் எவன்?
பதில் : பசியுள்ளவன்.
கேள்வி : எவர் பூஜிக்கத் தகுந்தவர்?
பதில் : பகவானுடைய அவதாரம்.
கேள்வி : பகவானை மகேசுவரன் யார்?
பதில் : சிவனும் விஷ்ணுவும் சேர்ந்த ஒரே உருவமான சங்கரநாராயணன்.
கேள்வி : பகவத்பக்திக்குப் பலன் எது?
பதில் : அவனுடைய லோகத்தையும் சொரூபத்தையும் நேரில் காண்பது.
கேள்வி : மோட்சம் எது?
பதில் : அஞ்ஞான நாசம்.
கேள்வி : எல்லா வேதங்களுக்கும் காரணம் எது?
பதில் : ஓம் என்ற பிரணவம்.

செய்திகள்

சென்னை, தியாகராஜநகர் கிரிபித் ரோடிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் பிரைமரி பள்ளியில் 1-4-81 காலை 9 மணிக்கு ஸ்ரீமத் சுவாமி பூதேஷானந்தஜி மகராஜ் அவர்கள், பள்ளியின் புதிய கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

சென்னை, வண்ணாரப்பேட்டையிலுள்ள 'யோகாசன ஆலயம்' என்ற சத்சங்கம், மகரிஷி தாயுமானவர் திருநாளை 13-4-81 மாலை 5-30 முதல் இரவு 8-15 வரை கொண்டாடியது. விழாவில் சுவாமி கமலாத்மானந்தர் கலந்து கொண்டு 'தாயுமானவரின் வாழ்வும் வாக்கும்' குறித்து உரையாற்றினார்.

18-4-81 ஆம் இரவு 6 மணிக்கு மயிலாப்பூர், விஸ்வ ஹிந்து பரிஷத்தின் நொச்சுக்குப்பம் கிளையில் சுவாமி கமலாத்மானந்தர் 'இந்து மதமும் இந்தியப் பண்பாடும்' குறித்து உரையாற்றினார்.

அரக்கோணம், நேருஜி நகரிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்த மன்றத்தின் 'சுவாமி விவேகானந்தர் நர்சரி பள்ளி'யின் புதிய கட்டிடத்திற்கு ஏப்ரல் 19-ஆம் நாள் காலை 7 மணிக்கு சுவாமி கமலாத்மானந்தர் அடிக்கல் நாட்டினார். மன்றத்தின் சார்பாக, கோதண்டராமர் கோவிலில் அன்று காலை 10 மணி முதல் 11 மணி வரை 'சுவாமி விவேகானந்தர் உலகிற்கு அளித்த செய்தி' என்ற தலைப்பில் சுவாமி கமலாத்மானந்தரின் சொற்பொழிவு இடம் பெற்றது.

திருவல்லிக்கேணி, சகோதரி நிவேதிதை அகாடமி 14-4-81 மாலை 6-30 மணிக்குத் தனது ஆண்டு விழாவைக் கொண்டாடியது. திருவல்லிக்கேணியிலுள்ள விவேகானந்த கேந்திரத்தில் நடைபெற்ற இவ் விழாவிற்கு சுவாமி ராகவேசானந்தர் தலைமை வகித்துத் தலைமையுரை வழங்கினார். சுவாமி கமலாத்மானந்தர், வே. ரங்கராஜன், கந்தசுப்பிரமணியன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

காந்தியடிகளின் பொன்மொழிகள்



❋ சுருக்கமாகப் பேசுகிறவனுடைய வார்த்தைகளில் ஆழ்ந்த சிந்தனை தேங்கியிருக்கும். அவன் ஒவ்வொரு சொல்லையும் அளந்து பேசுவான். உண்மையைத் தேடிச் செல்லும் என்னைப் போன்றவர்களுக்கு மௌனம் மகத்தான உதவியைச் செய்கிறது.

❋ நான் பரிபூரணமானவன் என்று உரிமை கொண்டாடவில்லை. உண்மையைத் தேடிச் செல்வதில் தணியாத ஆர்வம் கொண்டவன் என்ற உரிமையைத்தான் கொண்டாடுகிறேன். உண்மை என்பது கடவுளின் மற்றொரு பெயர்தான்.

❋ கடவுளின் பலமும், கடவுளின் அருளுமின்றி அஹிம்ஸாவாதியால் எதையும் செய்ய முடியாது. கடவுளின் பலமும் அருளுமின்றிக் கோபமோ, பயமோ, பழிக்குப்பழி வாங்கும் உணர்ச்சியோ கொள்ளாமல் சாகிற தைரியமும் அவனுக்கு ஏற்படாது.

❋ ருசியை உணரும் உறுப்பாகிய நாவைக் கட்டுப்படுத்த வேண்டும். ருசியைக் கட்டுப்படுத்தாதவனால் மிருக இச்சையையும் கட்டுப்படுத்த முடியாது என்பதை அனுபவத்தில் கண்டிருக்கிறேன். ருசியை அடக்குவது எளிதான காரியமன்று. ஆனால், இச்சையை அடக்குவது ருசியை அடக்குவதோடு சம்பந்தப்பட்டுள்ளது.

❋ என் பொது வாழ்க்கையில் பழிக்குப் பழி வாங்கும் சக்தி எனக்குப் பல முறை கிடைத்திருந்தும் நான் அவ்விதம் செய்யவில்லை. அவ்விதம் செய்யக்கூடாது என்று நண்பர்களுக்கும் உபதேசம் செய்தேன். இந்தக் கொள்கையைப் பரப்புவதற்காகவே என் வாழ்க்கை அர்ப்பணம் செய்யப்பட்டிருக்கிறது.